85

2941

சுந்தரர் நாடகம்

[illegible] OF THE [illegible]
[illegible] OCT [illegible]

வித்வான் - அ. மு. பரமசிவானந்த முதலியார்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சுந்தரர் நாடகம்

OFFICE OF THE ... 1937

894.8112

காஞ்சிபுரம் ஆண்டர்ஸன் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்

வித்வான் - அ. மு. பரமசிவாநந்த முதலியார்

இயற்றியது.

சைவசித்தாந்த மகா சமாஜம்

"திருவருளகம்", 22-A., கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.

1937

உரிமை பதிவு
செய்யப்பட்டது.

தனிப் பிரதி விலை அணா 2.
10 பிரதிகள் விலை ரூபா ஒன்று.

சாது அச்சுக்கூடம்,

இராயப்பேட்டை

சென்னை.

உ

சிவமயம்

பதிப்புரை

சைவ சமயாசாரியர் நால்வர் சரித்திரங்களைக் கற்பிப்பது சைவ ஆசிரியர்களின் முதற் கடமையாகும்; அவற்றைக் கற்பது சைவ மாணவர்களின் முதற் கடமையாகும். கற்பிக்கும் முறைகள் பலவற்றுள்ளும் சிறந்தது நாடக வாயிலாகச் சரித்திரத்தை யறிவித்தல். கற்கும் முறைகள் பலவற்றுள் சிறந்தது நாடகத்தை நடித்து அறிந்துகொள்ளுதல். மேல் நாட்டில் பெர்னார்டு ஷா போன்ற பேரறிஞர்கள் நாடக வாயிலாகப் பல அரிய கருத்துக்களை எளிய முறையில் பல்லாயிர மக்கள் மனத்தில் வேரூன்றச்செய்வது நாமறிந்த தொன்று. இம்முறையின் சிறப்பை யறிந்த சைவ சித்தாந்த மகா சமாஜத்தினர் மூன்றாண்டுகட்கு முன் அப்பர் நாடகத்தை வெளியிட்டனர். அதை முதன் முதலாக மாணவர்கட்குப் பயிற்றி நடிக்கச் செய்துபகரித்தவர் இந்நூலாசிரியரே யாவர். அந்நாடகம் திருவதிகையில் சமாஜ விழாவில் நடைபெற்ற போது அதைக் கண்ணுற்ற ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளும் வேறு பல பெரியார்களும் ஏனைய சமய குரவர் சரிதங்களும் விரைவில் நாடகங்களாக வெளிவர வேண்டுமென்று விரும்பினார்கள், அவர்கள் விருப்பத்திற் கிணங்க, சமாஜம் இந்நூலாசிரியரை இந்நாடகத்தை யெழுதித் தரும்படி கேட்டுக் கொண்டது. சமாஜத்தின் வேண்டுகோளுக் கிணங்கி இவ்வாசிரியர் இச்சிறு நூலை எளிய இனிய முறையில் மிகச் செம்

மையாக எழுதி யுபகரித்துள்ளார். நமது சமாஜத்தின் நன்றியும் சைவ நன்மக்களின் நன்றியும் இவ்வாசிரியருக்குரித்து. நிரம்பிய சைவப் பற்றும் சிறந்த ஊக்கமும் நாடகங்களை மாணவர்கட்குப் பயிற்றுவிக்கும் திறமையும் ஒருங்கேயுடைய இவ்வாசிரியர் ஏனைய இருசமய குரவர் சரிதங்களையும் விரைவில் நாடகங்களாக வெளியிடுதல் நலம்.

இச்சிறு நூல் மாணவர்கட்குப் பெரும்பய னளித்துத் தம்பிரான் தோழர் சரிதையைத் தமிழ் நாடெங்கும் பரப்புமாறு வெண்ணெய்நல்லூர்ப் பித்தனும் ஆரூர்த் தியாகேசனும் ஒற்றியூர் எழுத்தறியும் பெருமானுமாகிய முழுமுதற் கடவுள் அருள் புரிவானாக.

இங்ஙனம்

ம. பாலசுப்பிரமணியன்
காரியதரிசி
சைவ சித்தாந்த மகா சமாஜம்

சைவர் மகாநாடு, பெங்களூர்
ஈசுவர வருடம் புரட்டாசி ௴ ௩௨
17—9—1937

... OCT 1937

உ

சிவமயம்

சுந்தரர் நாடகம்

அங்கம் 1] [காட்சி 1

இடம்:—மணம்வந்தபுத்தூரில் சுந்தரர்க்குத் திருமணம் நடத்த ஏற்பாடாகியமணப்பந்தல். மணமக்கள் மணவறையில் உட்கார்ந்திருக்கிறார். அந்தணர் எல்லாம் அமர்ந்து இருக்கின்றனர். அரசர் நரசிங்கமுனையர் உட்புகுகிறார்.

அந்தணர் ஒருவர் :—அதோ நமது நரசிங்கமுனையர் வந்துவிட்டார். இனி திருமணச் சடங்கு நடத்தலாம்.

(எல்லோரும் எழுந்து அரசருக்கு மரியாதை செய்கின்றனர்.)

அந்தணர் ஒருவர் :—அரசபெருமானே இனி, கலியாணச் சடங்கு ஆரம்பிக்க உத்தரவு கொடுத்தருளும்.

நரசிங்க முனையர் :—அவ்வாறே ஆரம்பியுங்கள்.

(அந்தணர்கள் கலியாணச் சடங்கை நடத்தித் தாலியைச் சுந்தரர் கையில் கொடுக்கின்றனர். சுந்தரர் தாலிகட்டும் சமயத்தில் கிழவர் உள்புகுகின்றார்.)

கிழவர் :—நில்-நில் - நில்-நிறுத்துங்கள் - நிறுத்துங்கள்-நிறுத்துங்கள். நான் ஒன்று சொல்லவேண்டும். பிறகு தாலியைக் கட்டுங்கள்.

ஒருவர் :—என்னய்யா அபசகுனம். நல்லவேளையில் இந்த கிழட்டுப் பிணம் எங்கிருந்து வந்தது.

மற்றொருவர் :—ஏனய்யா வந்தால் சும்மா வருகிறது தானே. என்னமோ நில்லு-நில்லு-நில்லு என்று சொல்கிறீர்களே உமக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா என்ன?

மற்றொரு பெரியவர் :—ஏனப்பா சும்மாயிருங்கள். பெரியவரை இந்தமாதிரி எல்லாம் பேசாதீர்கள். ஐயா பெரியவரே! இங்கே வாரும். எதற்காக நிறுத்தச் சொன்னீர் மணத்தை?

கிழவர் :—இ....ல்...லை. இங்கே உமக்குச் சொல்ல வேண்டியது ஒன்று இருக்கிறது. அதை உங்கள் எதிரே சொன்னால் நன்றாய் இருக்கும் என்று உங்களிடம் வந்தேன். அதற்குள் அவர்கள் என்ன என்னமோ பேசுகிறார்களே.

பெரியவர் :—அவர்கள் கிடக்கட்டும். நீங்கள் சொல்லுங்கள்.

கிழவர்:—யாதொன்றுமில்லை. இதோ இந்தக் கலியாணப் பிள்ளைக்கும் எனக்கும் ஒரு வழக்கு இருக்கிறது.

சுந்தரர் :—(ஆத்திரத்துடன்) என்ன! எனக்கா! உம்முடனா! வழக்கா!

கிழவர் :—ஆம் அப்பா! அந்த வழக்குத் தீர்ந்த பிறகுதான் நீ கலியாணம் செய்துகொள்ள வேண்டும்.

சுந்தரர்:—அப்படியாசரி. உம்முடைய வழக்கைஎடுத்துச் சொல்லும் பார்ப்போம். அப்படி அந்த வழக்கு நியாயமானதாயின் அப்படியே அதை முடித்துக் கலியாணம் செய்துகொள்ளுகிறேன்.

கிழவர் :—சபையோர்களே! அந்தணர்களே! மணவினை காணவந்த மற்றவர்களே! இதைக் கேளுங்கள். இதுதான் என் வழக்கு. இந்த திருநாவலூரனாகிய மணமகன் எனது அடிமையாகும். ஆதலால் இவ்வடிமை வழக்கு தீரும் வரை அவன் மணம் செய்து கொள்ளலாகாது.

(சபையோர் எல்லோரும் சிரித்து ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளுகின்றனர்.)

சுந்தரர்:—என்னய்யா அழகாயிருக்கிறது? என்ன விளையாடுகிறீர்களா? நான் உமக்கு அடிமையா?

கிழவர்:-நான் சொல்லுவது உமக்குச்சிரிப்பாகவிருக்கும். நன்ருகச் சிரியுங்கள். நான் சொல்லியது ஆச்சரியமாய் யிருந் தாலும் இதோ இந்த ஓலையைப் பாருங்கள். (ஓலையை நீட்டு கிருர்.) இவ்வோலை இவ்வாரூரன் முப்பாட்டனுர் எழுதிக் கொடுத்த அடிமை யோலை. இதைக் கண்டேனும் உண்மை தெரிந்து கொள்ளுங்கள்.

சுந்தரர் :—வயதில் மூத்தோய், இதுவரையில் இவ்வுல கில் இருக்கும் முறையன்றி இது புதிதாகக் காண்கின்றது. அந்தணர் வேருேர் அந்தணருக்கு அடிமையாதல் எங்கே யாவது உண்டோ? அவ்வாறு அடிமை என்ற கதையை இன்று தான் கேட்டோம். நீர் என்னபித்தரோ, உமக்குப் பைத்தியம் பிடித்து விட்டதோ.

கிழவர் :—நான் பித்தனுனுலும் ஆகட்டும் அல்லது பேயனுனுலும் ஆகட்டும். நீ என்ன சொன்னபோதிலும் அத ணுல் நான் கஷ்டப்படமாட்டேன். நான் சொல்வதைக் கண்டு நீ அறிந்து கொள்ளாவிட்டால் என்னிடை வீண்வார்த்தை பேச வேண்டாம். நீ எனக்குப்பணி செய்யவேண்டியது.

சுந்தரர் :—சரி அப்படியானுல் நீர் ஓர்அடிமை ஓலைவைத் திருப்பதாகச் சொன்னீரே அதைக் காட்டும்.

கிழவர் :—உன்னிடத்தில் இந்த வோலையைக் காட்டலா மா. இதோ இந்த சபையாரிடத்தில் காட்டி உன்னை அடிமை யாக்கிக் கொள்ளுகிறேன் பார்.

(சிறிது நகர்கிருர். சுந்தரர் பின் தொடர்ந்து அந்த வோலையைப் பற்றிக் கிழித்து விடுகிருர்.)

கிழவர் :—ஐயையோ! என் ஓலையை அநியாயமாகக் கிழித்து விட்டானே. இங்கே யாரும் கேட்பவர் இல்லையா? இது அநியாயம் அல்லவா? (சிலர் வந்து விலக்குகின்ருர்.)

சபையோர்:—ஐயா பெரியவரே நீர் வருந்தாதீர். நாங்கள் அதைப் பார்த்துக் கொள்ளுகிறோம். அது கிடக்கட்டும். ஐயா நீர் இருப்பது எந்த ஊர்?

கிழவர்:—சபையோர்களே, என் ஊர் தொலைவில்இல்லை. இதோ கொஞ்சதூரத்தில் தெரிகின்ற திருவெண்ணெய்நல்லூரில் இருக்கிறேன். அது கிடக்கட்டும். இவன் அந்த ஓலையைக் கிழத்ததே தான் அடிமை என்பதைக் காட்டவில்லையா? அவன் எனக்கு அடிமையே.

சுந்தரர்:—பெரியோய்! நன்று நன்று நீர் பழயமன்றுடி போலும். உம் ஊர் வெண்ணெய் நல்லூரென்று உரைத்தீர் அல்லவா! வாரும் அங்கே உம் வழக்கை எடுத்துச் சொல்லுவோம்.

கிழவர்:—வெண்ணெய் நல்லூர் போனாலும் சரி வேறு எங்கே போனாலும் சரி அங்கே சென்று அந்த சபையார் முன்பு என் மூல ஓலையைக் காட்டி உன்னை எனக்கு அடிமையாக்கிக் கொள்ளுகிறேன் பார்.

(முன் செல்கின்றனர் யாவரும் பின் தொடர்கின்றார்)

அங்கம் 1.] [காட்சி 2.

இடம்:—வெண்ணெய் நல்லூர் அரங்கு, வேதியர் முன் விசாரிப்பு.

கிழவர்:—வெண்ணெய் நல்லூர் வேதியப் பெரியீர்! நும் முன் உரைக்க வேண்டும் வழக்காமொன்றுளது. இவ்வாரூரன் எனக்கு அடிமை. அவ்வடிமையென்று காட்டிய ஓலையை இவன் பற்றிக்கிழித்தான். இதை நீவிரே விசாரித்துத் தீர்ப்பளித்தருளும்.

அவையோர் :—என்ன சொன்னீர் ஐயா! இந்த மாநிலத்தில் அந்தணர் அடிமையாதலில்லையே? நீர் கூறுவது எதன்பாற் படுவது?

கிழவர் :—அப்படியா? நான் காட்டிய ஓலை இவன் தந்தையின் தந்தை எழுதிக்கொடுத்ததொன்றாகும். அதனையும் இல்லையென்று ஒல்லையில் மறுக்க இயலுமோ?

அவையோர் (ஆரூரரை நோக்கி):—நம்பியாரூரரே! என்ன, நீர் செய்தது உமக்கு நன்றாமோ? எழுதும் ஓலையை இசைவினாற் காட்டினால் நீர் அதைப் பற்றிக் கிழித்தல் ஓர் நீதியாமோ? அவ்வாறு செய்வது நன்றேயோ? கிழவர் சொன்ன வாக்கினைக் கேட்டோம். இனி உமது சொல்லென்ன? கூறும்.

சுந்தரர் :—அனைத்து நூலுணர்ந்த அவையீர்! என்னை நீவிரெல்லாம் ஆதி சைவனென்றறிவீர்! இவ்வாறு ஆதி சைவர் மற்றவர்க்கு அடிமையாதல் எங்கணும், என்றும், யாவருக்கும் ஒவ்வாத ஒரு செயலாகும். ஆனால் இம்மறையோர் இவ்வாறு கூறுவது என்னால் தெளியத் தகாததாய் இருக்கின்றது. இதன் மாயை இற்றெென அறியகில்லேன்.

அவையோர் :—மூதறிஞரே! இன்று நீர் கூறுவது ஓர் புதுமையாயுள்ளது. இது உலகில் நடைபெறாததொன்றாய்க் காண்கின்றது. இந்த வெவ்வுரையை மெய்ப்பிக்க உம்மால் இயலுமோ? ஆட்சியிலாகிலும், ஆவணத்திலாகிலும், அன்றிக் காட்சியிலாகிலும் உன் முறைக்கு ஓர் உறுதி காட்டல் வேண்டும். அவ்வாறு காட்டின் நான் மெய்யென்று ஒப்புக் கொள்வேன்.

கிழவர் :—அப்படியாயின் நன்று. அன்று அவனிடங் காட்டியது படி ஓலை. இதோ மூல ஓலையை நான் வைத்திருக்கின்றேன். அதைக் காட்டுகின்றேன். இதோ நிற்கும் ஆரூ

ரன் அதைப் பற்றிக் கிழிக்காதிருக்கும்படி செய்ய வல்லீரேல் எடுத்துக் காட்டுகின்றேன்.

அவையோர் :—நாம் அவரை ஓலைகிழிக்காது செய்து கொள்ளுகின்றோம். (சுந்தரரை நோக்கி) ஐயா நீர்சற்றே விலகி நில்லும்.

(அவர் ஓலை கொடுக்கின்றார். அவையோர் அதை வாங்கிக் கணக்கரிடம் வாசிக்கச் சொல்ல கணக்கர் வாசிக்கின்றார்.)

“ அருமறை நாவலாதி சைவனாரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு யானுமென்பால்
வருமுறை மரபுளோரும் வழித்தொண்டு செய்தற்கோலை
யிருமையா லெழுதிநேர்ந்தே னிதற்கிவை யென்னெழுத்து ”

மறையோர் :—நன்று இஃது இயைந்ததாகவே காண் கின்றது. எனினும் இது ஆரூரர் பாட்டனார் கையெழுத்து தானோ அன்றிவேறோ அறிய வேண்டும். ஆரூரரே, இவ் வோலை உம்முடைய பாட்டனாருடையது தானோ பார்த்தறி மின்.

கிழவர் :—பெரியீர்! இவன் பாட்டன் கையெழுத்தை இவன் பார்த்தறிதல் வல்லவனோ? அப்பாட்டனார் கையெழுத்துப் பிரதி வேறு ஏதாவதொன்றுளதாயின் அதைக் கொண்டு ஒத்திட்டுப் பார்ப்பின் உண்மை விளங்கும்.

மறையோர் :—கணக்கரே! இவ்வாரூரர் பாட்டனார் கையெழுத்தொன்று இருக்குமாயின் அதைக் கொண்டு வாரும் ஒத்துப்பார்ப்போம். (கணக்கர் ஒன்று கொண்டுவந்து ஒத்துப் பார்க்கின்றனர். ஒத்திருக்கின்றது.) ஐயா! ஆரூ ரரே, இவ்விரண்டு கையெழுத்துக்களும் ஒத்தே இருக்கின் றன. இனிச் செய்ய வேண்டுவது ஒன்றில்லை. நீர் இவருக்கு அடிமைதான். நீர் மறைமுனிவனார்க்குத் தோற்றீர்.

சுந்தரர் :—ஆ, அவ்வாறாயின் நான் என்ன சொல்ல இயலும். நான் அடிமையாகின்றேன்.

அவையோர் :—நன்று, மறையோய்! நீர் காட்டும் ஆவண ஓலையில் உங்கள் ஊர் எம்மூரே என்று எழுதியுள் ளது. அவ்வாறாயின் உம் வீடு, சுற்றம் முதலியவைகளை எங்கட்குக் காட்டுமின்.

கிழவர் :—அவ்வாறாயின் எம்முடன் வாரும் காட்டு கின்றேன்.

(முன் செல்ல அனைவரும் தொடர்கின்றனர். திருவருட் டுறை முன்னே கிழவர் சென்று பின் சென்ற அனைவரும் காண மறைந்து விடுகின்றனர். ஆண்டவன் அனைவரும் காண ஆலயத்தே காட்சி அளிக்கிறார். சுந்தரர் வருந்துகிறார்.)

இறைவன் :—ஆரூர! வருந்தற்க. முன்பு நீ கயிலையில் நமக்குத் தொண்டனா யிருந்தனை. உன் மனதிற் றோன்றிய ஓர் வேட்கை வயத்தால் நம் ஏவலாலே மண்ணில் வந்து பிறந்தனை. அன்று யாம் கூறியபடியே நீ இவ்வுலக வாழ்க் கையில் வீழ்ந்து வருந்தா வண்ணம் நாமே நேரில் வந்து நன்புல மறையோர் முன்னம் தடுத்தாண்டோம்.

சுந்தரர் :—(சிரம் கைகூப்பி) ஆ! என்னை ஆளுடைய இறைவ! உன்னுடைய உயர்பெரும் பதத்தை உன்னி நின்ற என்னை வலிய ஆட்கொண்ட வள்ளலே! உன்னருட் பெருந் திருவருளை உன்னாது வாழ்நாளை அவமே போக்கினேனே. உலகுக்கொரு முதலே, உனது கருணைத் திறத்தை உல கறியக் காட்டினை. உற்றாரிலாதார்க்கு உறுதுணையாகும் உத் தம! உனது வலிய ஆட்கொண்ட செயலோ இது? (சோர் வடைந்து) நான் உமக்கு என் செயலாற்றுவன்!

அசரீரி:—

“மற்றுநீ வன்மைபேசி வன்றொண்ட னென்னுநாமம்
பெற்றனை நமக்கு மன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க

அர்ச்சனை பாட்டேயாகு மாதலான் மண்மே னம்மைச்
சொற்றமிழ்ப் பாடு."

சுந்தரர் :—கற்றூர்கள் உற்றேரும் காதலானே! வேதியனுகி என்னை வழக்கினுல் வெல்ல வந்து அறியா என்க்கு உணர்வு தந்து உய்யக்கொண்ட கோதிலா அமுதே! அயனும் மாலும் அறியொணு ஆதியே! ஐந்தெழுத்தும் பாடிய பொருளாயுள்ளாய்! இன்று உன் குணப்பெருங் கடலை நாயேன் யாதினை அறிந்து என் சொல்லிப் பாடுகேன் நான்?

இறைவன் :—வன்றெண்ட! அஞ்சற்க. நீ முன்பு என்னைப் 'பித்தா' என்று மொழிந்தனை ஆதலால் என்னைப் 'பித்தன்' என்றே பாடுவாயாக.

சுந்தரர் :—ஆ! ஆட்கொண்ட அண்ணலே! உன் அருள் நினைந்து பாடுதற்கும் அடியெடுத்துத் தந்தாய். உன் பெருந் திறம் பேசற்பாற்றே! உலகத்தீர்! ஒன்றுய் வாரும். உமையொரு பாகனைப் பாடுவோம்.

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை [யுள்
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட் டுறை
அத்தாவுனக் களாயினி யல்லேனென லாமே.

அங்கம் 2.] [காட்சி 1.

(திருவதிகையில் ஒரு மடம்—நள்ளிருள்—சுந்தரர் படுத்துறங்குகிறுர்—இறைவன் ஓர் அடியார் கோலத்தோடு அருகே வந்து படுத்து அவர் தலைமேல் காலை வைத்து இருமுகிறுன்.)

சுந்தரர் :—யாரது? தூங்கிக் கொண்டிருக்கும்பொழுது என் தலைமேல் கால் வைப்பது. (கிழவர் இருமுகிறுர்.) ஓ ஐயோ! பாவம்! ஓர் கிழவர் போலும். ஐயா என் தலையின்

மேல் கால் வைக்காதேயுங்கள். சற்று தள்ளி படுத்துக் கொள்ளும்.

கிழவர் :—அப்பா! தலையின் மேலா கால் வைத்து விட்டேன். ஏதோ கட்டையென்று தெரியாமல் செய்துவிட்டேன் போலிருக்கிறது. நான் வயதாகிய கிழவன். எனக்கு ஒன்றுமே தெரியவில்லை. இது உன் தலையா? அப்படியானால் இதோ என் காலை எடுத்துக் கொள்ளுகிறேன். என் மேல் கோபித்துக் கொள்ளாதே.

சுந்தரர் :—சரி. சிறிது ஒதுங்கித் தூங்கும்.

(உடனே சுந்தரர் எழுந்து மற்றொருபுறம் படுத்துறங்குகிறார். அங்கும் அக்கிழவர் எழுந்து போய் அவர் தலைமேல் தம் காலை வைக்கிறார்.

சுந்தரர்:—(கோபத்துடன்) யாரது? மறுபடியும் அதே கிழவரா? (கிழவர் இருமுகிறார்.) நீரா என் தலைமேல் மறுபடியும் காலை வைப்பது?

கிழவர் :—அப்பா. மறுபடியுமா - உன் தலையிலா - காலை வைத்தேனு. நான் அங்கே படுத்துக்கொண் டிருந்தேனே. இங்கே எப்படி வந்தேன். எனக்கு ஒன்றும் தெரியவில்லையே.

சுந்தரர் :—நன்று நீர் கூறுவது. உடனே விலகி அப்பால் செல்லும். என் தலையின்மேல் கால் வைத்து என் தூக்கத்தையும் கெடுக்கிறீர். எழுந்து அப்பால் போகிறீரா? என்ன. சரி - நானே போய் படுத்துக் கொள்ளுகிறேன்.

(சுந்தரர் எழுந்து மறுபுறம் போய்படுக்க அங்கேயும் கிழவர் காலை வைக்கிறார்.)

சுந்தரர்:—ஆ! மறுபடியும் இங்கே வந்தாயா? உன்னை என்ன செய்கிறேன் பார். (எழுந்திருக்கிறார்.)

கிழவர்:—அப்பா உனக்கு நான் கிழவன் என்பது தெரியவில்லையா? என்னைப் பார்த்தா இப்படிக் கோபிப்பது?

சுந்தரர்:—நீ யார்? ஏன் இப்படிப் பலமுறை என் தலை மேல் காலை வைக்கிறாய்?

கிழவர்:—ஆ! என்னை நீ அறிந்திலையோ? இனியாயி னும் அறிந்துகொள். (மறைந்து விடுகிறார்.)

சுந்தரர்:—(துக்கித்தவராய்) என்னே! என் அறியாப் பேதமை. உலக நாயகனாகிய ஒரு பரம்பொருளே தானாக வந்து எனக் கருள்புரிந்தும் நான் அறியாது போனேனே. என் இறுமாப்பு என்னே! ஆதி பராபர! அங்கயற்கண்ணி பங்க! உலகமெங்கும் ஒன்றாகக்காணும் உத்தம! செம்மாந்து அறியாது யான் என் செய்தேன்? என்னைத் தானே வந்து பதமளித்து ஆட்கொண்ட அண்ணல்தன் பொற்பாதம் அடி யேன் முடிமிசை அடையப் பெற்றும் பற்றாது விட்டேனே! என் மனப்போக்கு இருந்தவாறு என்னே! ஆ! விடையேறும் வித்தகா! உன் அருள் விளையாடலை ஒன்று மறியாக் கசட னாகிய என்னிடத்திலோ காட்ட வேண்டும்?

தம்மானை யறியாத சாதியாருளரே
சடைமேற்கொள் பிறையானை விடைமேற்கொள் விகிர்தன்
கைம்மாவி னுரியானைக் கரிகாட்டி லாட
லுடையானை விடையானைக் கறைகொண்ட கண்டத்
தெம்மான்ற னடிக்கொண்டென் முடிமேல்வைத் திடுமென்னும்
ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்
எம்மானை யெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே.

திருவாரூர்க் கோயில்

சுந்தரர்:-கரையுங் கடலு மலையுங் காலையு மாலையு மெல்லாம்
உரையில் விரவி வருவா னொருவ னுருத்திர லோகன்
வரையின் மடமகள் கேள்வன் வானவர் தானவர்க்கெல்லாம்
அரைய னிருப்பது மாரூ ரவரெம்மையு மாள்வரோ கேளீர்.

புற்றிடங் கொண்ட புண்ணிய! ஏழைகட் கிரங்கும் வந்தால்! பொல்லாத நெறியுகந்தார் புரங்கள் மூன்றும் பொன்றிவிழ அன்று பொருசரந் தொட்டானே! பூங்கோயில் மேய புண்ணியா! யார்க்கும் பற்றிடமாய பரம்பொருளே! பார்ப்பதி பாக! தூநறுங் கொன்றை அண்ணால்! உன்னைக் காண நீயே அழைத்த பேறினை எண்ணுதிருக்க இட முண்டோ?

அசரீரி :—வன்றொண்ட! வாழிய நீ! நம்மை உனக்குத் தோழமையாகத் தந்தனம். அன்று நாம் ஆட்கொள்ள வந்த போதிருந்த திருமணக்கோலத்தோடு என்றும் இப்புவிமிசை நிலவி நின் வேட்கை தீர மண்மேல் விளையாடுவாயாக.

சுந்தரர் :—எனை ஆட்கொள வந்த மறையவனே! ஆரூர் அமர்ந்த அருமணியே! வாட்கயல் கொண்ட கண் மங்கை பங்க! நாயேனைப் பொருளாக எண்ணி உன்பதம் இன்று தந்தெனை ஆட்கொண்டது உன் பெருங் கருணையன்றே!

(வழுத்தி ஓர் புறம் செல்கின்றார். மறுபுறம் பரவையார் பாங்கியருடன் வந்து பூசனை செய்கின்றார்.)

பரவையார் :—பேராதரிக்கும் அடியவர் தம் பிறப்பை ஒழித்துப் பெருவாழ்வும் பேறும் கொடுத்தருளும் பிஞ்ஞக! நின் வழித் தொண்டருள் அடியாள் ஒருத்தி இவண் நின்று நின் திருஉருக்கண்டு களிக்கும் பேறருளிய பெரியாய்! உன் அருள் வழிபட்டு நிற்க எனை ஆட்கொண்ட அண்ணால்! உன்

னற்கரிய ஒருவ ! நீ எனை வழித்துணை கொண்டு வாழ்விக்க வேண்டும்.

(பரவையார் செல்கின்றார். மறுமுறை ஒருபுறம் சுந்தரரும், மறுபுறம் பரவையாரும் வருகின்றனர்.)

சுந்தரர் :—ஆ, இவ்வற்புதமென்னே ! இத்திருக்கோயிலுக்கு இத்தகைய பேரெழில் வாய்ந்தா ளொருத்தி வந்து வணங்கிச் செல்வதை இன்றே கண்டனமன்றே. இது ஆண்டவன் அருள் வடிவோ.

“ கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல் சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக் கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேன் என் செய்வதுவே ”

“ மானிளம் பிணையோ தெய்வ வளரிள முகையோ வாசத்
தேனிளம் பதமோ வேலைத் திரையிளம் பவளவல்லிக்
கானிளங் கொடியோ திங்கட் கதிரிளங் கொழுந்தோ காமன்
றனிளம் பருவங் கற்குந் தனியினந் தனுவதாமோ ”

(இவ்வாறு கூறி இறைவன் சன்னிதியை இவர் சேர்கின்றார்.சன்னிதியிலிருந்து வரும் பரவையார் மறுபுறம் சென்று சந்திக்கிறார்.)

பரவையார் :—என் கண் முன் தோன்றும் இக்கட்டழகன் யாரோ ! அறியக் காண்கிலனே ! நிலைத்துள்ள என் மனம் நிலையிலாத் தன்மையால் இன்று அலைகின்றதே.

“ முன்னே வந்தெதிர் தோன்று முருகனோ பெருகொளியால்
தன்னேரின் மாரனோ தார் மார்பின் விஞ்சையனோ [னோ
மின்னேர் செஞ்சடை அண்ணல் மெய்யருள் பெற்றுடையவ
யென்னே யென் மனந்திரித்த இவன் யாரோ அறிகிலனே !”

(பிறகு பரவையார் இறைவனை வழிபட்டு வேறுவழியாகவெளிச் செல்கின்றார்.)

சுந்தரர் :—அதோ தோன்றும் அவ்விளங் கொடியார் யார் ?

ஒருவர் :—அவர் நங்கை பரவையார் எனப்படுவார். அவர் உம்பர்தரத்தார்க்கும் சென்று சேர்வறியாச் சிறப்பு வாய்ந்தவர்.

சுந்தரர்:—பேர் பரவை பெண்மையினிற் பெரும்பரவை விரும்பர் மே
லார் பரவை யணிதிகழு மணிமுறுவ லரும்பரவை
சீர் பரவை யாயினு டிருவுருவின் மென்சாய
லேர் பரவை யிடைப்பட்ட என்னுசை யெழு பரவை.

(என்று கூறி கோயிலுட் புகுந்து ஆண்டவனை வேண்டுகின்றார்)

அருளுடைப் பெரும ! அன்று வலிய வந்து மணவினை நடக்காமற்றடுத்த நீர் என்னை வலிய இவ்வாரூர்க் கழைத்தது ஏனோ ? அழைத்து அந்த மணக்கோலத்தோடு விளையாடு என்று உரைத்தது ஏனோ ? எம்பெருமானே ! எவ்வாறாயினும் தாம் அக்காரிகையாம் பரவையை எனக்கு மணம் முடித்து வைக்கவேண்டும். நீங்கள் கூறியபடியே எல்லோரும் என்னைத் தம்பிரான் தோழர் என அழைக்கின்றனர். உம்மைத் தோழராகப் பெற்ற எனக்குக் கிட்டாததென் ? பெரும ! நீர் எனக்கு அப்பரவையைத் தந்தருளவேண்டும்.

(தொழுது வெளிவந்து பரவையைத் தேடுபவராய்)

ஆ, இப்போது வெளிப்போந்த நங்கை எம்மருங்கு போயினள் ? பாசவினைப் பற்றறுக்கும் பரமனது ஆசை மேலோ ராசை அளித்து தேசின் மன்னி என்சிந்தை மயக்கிய ஈசனருள் பெற்ற எழிலார் எங்கு சென்றனர் ? ஆண்டவனை அன்றி வேறொன்றை விரும்பாத என்னைத் தன்னை விரும்பும்படி செய்த தாழ்குழலாள் எங்கு சென்றனள் ? இறைவனை எண்ணும் என் சிந்தை மயக்கிய சேயிழை சென்ற திசை யெதுவோ அறிகிலேனே.

(பரவையார் தனித்து மெலிதல் ; மணி நிலாமுற்றம்)

பரவையார் :—கார்குழலீர் எல்லோரும் என்னைத் தனி விடுத்து ஏகுமின். சேடி ! மைவிரவு கண்டரை நாம் வணங் கப் போகும் சமயத்தே எதிர் வந்தவர் யார் ?

தோழி :—அவர் அந்தணர் குலத்தினராம். இறைவ னூரால் ஆட்கொள்ளப்பட்ட சைவ முதற்றிருத்தொண்டராம். தம்பிரான் தோழராம். நம்பி என்பார்களாம்.

பரவையார் :—ஆ, இறைவனூர் திருத்தொண்டரா அவர் ! ஆ, உயிர்த்தோழி ! ஈதென்ன ? தெள்ளிய சந்தனம் முதலியனவெல்லாம் கனல்வாய்ந்த தன்மையன வாய்க் காண்கின்றனவே. சந்தின் றழலைப் பனிநீரளவித் தடவுங் கொடியீர் ! தவிரீர். தவிரீர். ஆ, என்னே ! இச்சந்தி ரனும் கொடுமை புரிகின்றான். வந்திங்குலவும் விரை யார் மலய அனிலமும் அனலாய் வருகின்றது. ஆ, இந்நிலையில் அந்தண் புனலும் அரவும் விரவுஞ் சடையான் அருள் பெற்ற அத்தயவாளர் அருளாதிருக்கின்றார் ? (தோழியர் அகல்கின்றனர்). ஆ, கொடுமை மிகும் சந்திரனே ! நான் தனிமையில் உற்றேன் என்று எனை வருத்த எண்ணி னையோ ? இன்றேயுலகில் எனக்கொன்று பிறர்க்கொன்றாக இருக்கின்றாய். இவ்வாறு முன் தோகையர்கள் யாவரையும் ஒத்துநோக்காத் தன்மையிலன்றோ நீ தேய்ந்து போகின் றாய். ஆ, உன் கொடுமை யென்னே ! உன் கொடுமை நினைந்து தான் போலும் என்னை ஆளும் அன்னையோர் பாகனும் விடத் தையும் மிடற்றடக்கி உன்னை அங்கமில்லா அவிர் சடையில் தங்க வைத்தது.

கன்னற் சிலையாய் ! உருவிலாளனே ! என் மனத்தைக் கலக்கும் காளை கவின் கண்டு முன்னிற்பதற்கு நாணியோ இன்று என்னை முனிகின்றாய்.

(தோழியர் சிலர் உள்பிரவேசிக்கின்றனர்.)

ஒரு தோழி :—என்னம்மா என்னென்னமோ பிதற்று கிறீர்கள். ஏதாவது பிடித்துக் கொண்டதா என்ன?

மற்ரேருத்தி :—அடி, இது உனக்குத் தெரியாதா? அன்று கோயிலுக்குச் சென்ருேமே அங்கே ஒன்று வந்து பிடித்ததே!

பரவையார் :—சீ, போடி இது என்ன விளையாட்டு? என்னிடமா நீங்களெல்லாம் விளையாடவேண்டும்?

தோழி :—இல்லையம்மா. அப்படி ஒன்றுமில்லை. ஏதோ அங்கொருவரைக் கண்டீர்களே யென்று சொன்னேன்.

பரவையார் :—(கோபமாக) என்ன விளையாட்டு முற்று கிறதா? யாரை நான் எங்கேயடி கண்டேன்?

ஒருத்தி :—அம்மா எங்கள்மேல் கோபப்பட வேண்டாம். நாங்கள் கண்டதைச் சொன்னேம். எங்களிடம் உண்மையைக் கூறினுல் நாங்கள் உன் காரியத்தை முடித்து வைப்போம்,

பரவையார் :—ஆ! அப்படியா உயிர் தோழி. மற்றவர்களை யெல்லாம் வெளியே போகச் சொல்.

உயிர்த்தோழி :—சகிகளே! நீங்கள் வெளியே சென்று மலர் கொய்து வாருங்கள்.

(தோழிகள் செல்கின்றனர்.)

தோழி :—அம்மா! அனைவரும் சென்று விட்டார்களே. இனியாவது உண்மையைச் சொல்லமாட்டீர்களா?

பரவையார் :—தோழி! நான் என்ன சொல்ல வேண்டியிருக்கிறது? கோயிலுக்குச் சென்றது முதல் நடந்ததெல்லாம் நீயே யறிவாய்.

தோழி :—ஓஹோ, இந்த சந்திரனை அந்த பாம்பு பிடித்துக் கொண்டதாக்கும். அறிந்தேன், அறிந்தேன். இப்போது என்னை என்ன செய்யச் சொல்கிருய் ?

பரவையார் :—ஆ! தடுமாற்றம் இல்லாது இருந்தவளுக்கும் இன்று தடுமாற்றம் உண்டாகியதை நேரில் கண்ட தோழியே உனக்கு நான் என்ன சொல்லப் போகிறேன்.

தோழி :—நீ ஒன்றும் சொல்ல வேண்டாம். நான் எல்லாம் தெரிந்து கொண்டேன். இதோ ஒரு நொடியில் அவரை இங்கே அழைத்து வந்து விடுகிறேன் பாரும்.

பரவையார் :—ஹா! உண்மையாகவா ? இப்பொழுதேவா ? இங்கேயா !—அழைத்து வருகிருயா ?

தோழி :—என்ன அவசரண்டியம்மா ?

பரவை :—ஒன்றுமில்லை சென்று சீக்கிரம் வா.

(தோழி செல்லுகிருள் பரவையார் தனிமையில்.)

'தேருங் கொடியும் மிடையும் மறுகில்
திருவாரூரர் நீரே யல்லால்
ஆரென் துயரம் அறிவார் அடிகேள்
அடியேன் அயரும் படியோ இதுதான்
நீரும் பிறையும் பொறிவாள் அரவின்
நிரையும் நிரைவெண்டலை யின்புடையே
ஊரும் சடையீர் விடைமேல் வருவீர்
உம தன்பிலர்போல் யானே உறுவேன்.'

திருவாரூர் அந்தணர் வீதி

(பல அந்தணர் கூடி பேசுகின்றனர்.)

ஒருவர் :—என்ன இது ! நான் ஒரு கனவு கண்டேன். அது உங்களுக்குத் தெரியுமா ?

மற்றவர்: —நான் கூட ஒரு கனவு கண்டேன். அது அதிசயமானது.

மூன்றுமவர் : —நானும் ஒரு கனவு கண்டேன் ; அதை உங்களுக்குச் சொல்லவா ?

நான்காமவர்:—எல்லோரும் கண்டோம் ; யார் யார் என்னென்ன கண்டோமென்பதைச் சொல்லுங்கள்.

(ஒரு போக்கிரி வருகிறுன்; உற்று வந்து கேட்கிறுன்.)

முதலாமவர் :—ஐயா, நான் கண்டது ஓர் அற்புதமான கனவு. நம்முடைய கோயிலிலே அடிமை செய்கிறுளே பரவையென்பவள் ; அவளுக்கு ஓர் கணவனை ஆண்டவனே தேடித் தந்திருக்கிறுர். யாரோ திருநாவலூரில் பிறந்தவராம்; அந்தணர் குலத்தவராம். அவர் கோயில்களை யெல்லாம் தரிசித்து வரும்பொழுது சிதம்பரம் போனுராம். அங்கு கூத்தாடும் பெருமான் அவரை வேண்டுமென்றே இங்கே போகச் சொன்னுராம். அவரும் இங்கே வந்து சில நாட்களாக இருக்கிறுர். அவருக்கு நம் பரவையைக் கலியாணம் செய்துகொடுக்க வேண்டும். இதை ஆண்டவரே நேராக என் கனவில் சொன்னுர்.

மற்றவர் :—அடடா ! அப்படியா நானும் அதே கனவு தானே கண்டேன்.

மூன்றுமவர் :—நானும் அப்படியே.

நான்காமவர் :—நாம் எல்லோரும் ஒரே கனவைத் தான் கண்டிருக்கிறோம். ஆதலால் இதில் ஏதோ அதிசயம் இருக்கிறது. வாருங்கள் சென்று சுந்தரரைப் பார்ப்போம்.

போக்கிரி :—நீங்களெல்லாம் கூடி என்னை ஏய்க்கப் பாக்கிறீங்களா?

மூன்றுமவர் :—என்னையா ஏய்க்கப் பார்க்கிறோம்? நீர் யார்; உமக்கு இங்கு என்ன வேலை.

போக்கிரி :—நான் யாரா? உங்களுக்குத் தெரியாதா? இப்போ யாரோ சொன்னிங்களே ஒரு குட்டி பரவை என்று. எங்கள் அத்தை மகளுங்கோ அவள்.

இரண்டாமவர்:— சரி அதைப்பற்றி இப்போ என்ன.

போக்கிரி :—இல்லே; அவளை யாரோ ஒத்திருக்கு கலியாணம் பண்ணனும் மின்னிங்களே. அவர் யாரு?

நாலாமவர் :—அதைப்பற்றி உமக்கு என்ன? எங்களைத் தடுக்காதேயும். எங்களுக்கு வேலை இருக்கிறது. நாங்கள் போக வேண்டும்.

(சிறிது செல்கின்றனர்.)

போக்கிரி :—ஐயா ஐயா! கொஞ்சம் நில்லுங்கோ. அந்தக் குட்டியே நான் கலியாணம் பண்ணிக்கலாமென்று பாத்துங்கிறேன். அதக்குள்ளே நீங்கோ என்னென்னமோ சொல்ரிங்களே. எங்க அத்தைப் பொண்ணை அந்த பாப்பான் கை வைப்பானு பாக்கறேன்.

ஒருவர் :—அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. எல்லோருடைய கனவிலும் ஆண்டவன் வந்து சொல்லி இருக்கிறார். நாங்கள் அதன்படியே கலியாணம் செய்துவைக்கப் போகிறோம்.

போக்கிரி :—ஹா ஹா. அப்படியா! நீங்கள் கலியாணம் பண்ணிவைக்கிறத்துக்குள்ளே நான் போய் அடிச்சுகினு பூடறேன்; இதோ பாருங்கோ.

(ஒருபுறம் ஓடுகிறான்; மறுபுறம் சுந்தரர் வருகிறார்.)

அந்தணர் ஒருவர் :—அதோ வருகிறாரே அவர்தான் சுந்தரர் போலும்.

நான்காமவர்:—ஆம்; ஆம். அவர் எனக்கு நன்றாகத்தெரியுமே. (சுந்தரர் வருகிறார்.)

ஒருவர் :—ஐயா! நீர்தான் சிதம்பரத்திலிருந்து ஆண்டவனால் அனுப்பப்பட்டவரோ?

சுந்தரர் :—ஆமாம். உங்களது கனவின் நிகழ்ச்சியை ஆண்டவனால் அறிவிக்கப்பட்டு இங்கு வந்தேன்.

நான்காமவர்:—வன்தொண்டரே! தம்பிரான் தோழரே! நாங்களிரவு கண்ட கனவின் நிகழ்ச்சியை உம்மிடை எடுத்து இயம்புதல் வேண்டும். எங்கள் யாவர் கனவிலும் தோன்றி ஆரூர் ஆண்டவன் உமக்கும் பரவைக்கும் உயர்மணம் புரியவைத்தருளச் செப்பினன். அதன்படியே இன்று இந்நன்னாளிலே ஆண்டவன் அருள் கூடிற்று. (பக்கத்திலிருந்தவரை நோக்கி) நீர் சென்று பரவையார்க்கு இச்சங்கதிகளைத் தெரிவித்து அவரைச் சந்நிதிக்கு அழைத்து வாரும். (அவர் செல்கின்றனர்) வன்தொண்டரே வாரும். நாமும் ஆண்டவன் சந்நிதிக்குச் செல்வோம்.

(யாவரும் கோயிலுக்குள் செல்கின்றனர். பரவையார் பாங்கியருடன் ஒருபுறம் வருகின்றனர்.)

அந்தணர் :—புற்றிடங்கொண்ட புண்ணியா! தாங்கள் எம் கனவில் கூறினபடியே உம்சந்நிதியில் இவ்வன்தொண்டருக்கும் பரவையார்க்கும் மணம்செய்து வைக்கிறோம். தங்கள் ஆசிபெரிதும் வேண்டப்படுவதாக.

(சுந்தரரும் பரவையாரும் மாலைமாற்றிக் கொள்கின்றனர்.)

திருவாரூர் கோயில்

(தேவாசிரியன் மண்டபத்தே அனைவரும் வீற்றிருக்கின்றனர். சுந்தரர் மணக்கோலத்துடன் செல்கின்றனர்.)

சுந்தரர்:— இத்தகைய அடியார்களை ஒருங்கு காணப் பெற்றும் இவர்களுக்கு அடியேன் அடிமை ஆகுநாள் எந் நாளோ என்று வாடுகின்றேன். அண்ணலே! நீயே யருள் புரியவேண்டும்.

(ஆரூரர் காட்சியளித்து நிற்கிறார்.)

திருவாரூர் தியாகேசா! இவ்வழித் தொண்டர்களை நான் பாடப்பெற வேண்டும். அவர் பெருமை எத்தன்மை யதோ?

அசரீரி :—

பெருமையால் தம்மை ஒப்பார் பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகைவெல்வார் ஊனம் மேல் ஒன்றும் இல்லார்
அருமையாம் நிலையில் நின்றார் அன்பினால் இன்பம் ஆர்வார்
இருமையுங் கடந்து நின்றார் இவரை நீ அடைவாயாக.

சுந்தரர் :— அண்ணலே! அடியார்களை நான் எவ்வாறு பாடுவேன்? பாமாலை பாடுந்திறத்தை எனக்கு அருள்செய்ய வேண்டும்.

அசரீரி :— 'தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என்ற இவ்வடியை முதலாவதாகக்கொண்டு பாடு வாயாக.

சுந்தரர் :—

தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே யென்னாத இயற்பகைக்கு மடியேன்
இளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்

வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்
அல்லிமென் முல்லையந்தா ரமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே.

அங்கம் 3] [காட்சி 1

விருத்தாசலம் கோயில்

(திருக்கோயிலில் சுந்தரர்சென்று வணங்குகிறார்.)

சுந்தரர்:—முதுகுன்றத்து மூர்த்தியே! அன்று குண்டையூர் கிழார்க்குக் கோடி கல நெல்ஈந்து திருக்கோளிலியிலிருந்து அந்நெல்லைக் கொண்டு செல்ல எனக்கு ஆள் அனுப்பிய ஆண்டவனே ! கூடலையாற்றூர்க்கு வழிகாட்டிய கொற்றவா ! என் இளைப்பை அறியீர் ! இம்மை ஏத்துவார்க்கு அம்மை செய்வதென் ? சோலைசூழ் திருமுதுகுன்றமேவிய முதல்வா! உன் அருள் இருந்தவாறு இதுவோ ! சிறந்த செல்வனாகி உலகம் ஆக்கிய நீர் ஆடி அசைந்து அடியருடன் அகந் தோறும் பாடிப்படைத்த பொருள் எல்லாம் எற்றுக்கோ ! உமையாளுக்கோ ! எனக்குப் பொருள்தரல் வேண்டும். அப்பொருள்கொண்டு பரவையாருடன் நான் மகிழ்ந்து வாழ வேண்டும். “மதியிலேன் படும்வெந்துயரம் எல்லாம் நீக்கும் மன்னவா. அமுதாய் உயிர்கெல்லாம் உதித்தவனே ! தோற்றம் ஈறு முதலாகிய தூயோய்! உன்னைவணங்கும் இவ்வடியேற்கு வேண்டும் பொன் அளித்தருள்.

(உடனே பெரும் பொற்காசுகள் 12000 எதிர் கண்டார்.)

ஆ ! இதுவன்றோ ஈசன் அருள் ! என்னை உன் அடிமையாக்கொண்டதை இன்றன்றோ உலகம் அறிந்து கொண்டது. இம்மையோடு அம்மையில் இன்பம் ஆண்டவா. தேவரீர் அருளிய பொன்னெல்லாம் ஆரூரில் உள்ளோர் அதிசயிக்கும் படி அங்கே வரும்படி செய்யவேண்டும்.

அசரீரி :—வன்றெண்ட! இப்பொன்னையெல்லாம் செழு மணிமுத்தாற்றிலிட்டு ஆரூரில் குளத்தே போய் எடுத்துக் கொள்க.

சுந்தரர்:—அவ்வாறே அண்ணல்! (ஆற்றில் போடுகிறார்)

அங்கம் 3] [காட்சி 2

திருவாரூர்

(பரவையார் வீடு. தனி அறை. சுந்தரரும் பரவையாரும் பேசிக் கொண்டிருக்கின்றனர்.)

பரவையார் :—என் ஆருயிர்க் காதல! என்னை ஈண்டே தனியாகவிட்டு வெளிச் சென்றீரே! எவ்வெத் தலங்களுக்குச் சென்றீர். என்னென்ன அதிசயங் கண்டீர்! எனக்குச் சொல்லலாகாதா ?

சுந்தரர்:—என் ஆசை இடைப்பட்ட எழுபரவையே! புகலூரிற்பொன் பெற்றுவந்து உனைவிட்டு நீங்கிய பிறகு திருநன்னிலம், திருவீழிமிழலை, திருவாஞ்சியம், அரிசிற்கரைப்புத்தூர், திருநாரையூர், சித்தீச்சுரம், திருவாவடுதுறை, திருவிடைமருதூர், திருநாகேச்சுரம், சிவபுரம், திருக்கலயநல்லூர், திருக்குடமூக்கு, திருவலஞ்சுழி, திருநல்லூர், திருச்சோற்றுத்துறை, திருக்கண்டியூர், திருவையாறு, திருப்பூந்துருத்தி முதலிய தலங்களைத் தரிசித்து, பூந்துருத்திவந்து ஓர் நாள் உறங்குகையில் இறைவன் கனவில் தோன்றி 'மழபாடி மறந்தனையோ' என்றார்.

பரவை :—ஆ! என்ன அற்புதம் இது. பிறகு என்ன நடந்தது ?

சுந்தரர் :—பிறகு மழபாடி தரிசித்துக்கொண்டு காவிரி இருகரையிலும் உள்ள தலங்களைக்கண்டு திருவானைக்கா தரிசித்துத் திருப்பாச்சிலாச்சிராமம் அடைந்தேன். அங்கு என் செலவுக்குப் பொருள் இல்லாமையால் இறைவனை வேண்டி

னேன். அவர் பொன் கொடுக்காமையால் 'வைத்தனம் தனக்கே' என்னும் திருப்பதிகத்தைப் பாடினேன். பாடி முடிந்ததும் பொன்னும் வந்தது.

பரவை :—சரி, சரி ! புலவர்கள் எவ்வாறுயினும் பாடிப் பொன் பெறுகிறுர்கள். நாங்கள் என்ன செய்வோம் ?

சுந்தரர் :—அப்படி அல்ல ! உலக மக்களைப் பாடித் துன் புறுவதைக் காட்டிலும் ஒருவனுன உமையோர் பாகனைப் பாடுதல் மேல் அல்லவா ? இதை நான் முன்பே சொல்லி யிருக்கிறேனே. புகலூரில் பொன்பெற்ற காலத்து நான் பாடிய பாட்டு உனக்கு நினைவிருக்குமே.

பரவை :—நினைவு இருக்கிறது.

சுந்தரர் :—சரி. எதோ பாடு பார்க்கலாம்.

பரவை :—

தம்மையேபுகழ்ந் திச்சைபேசினுஞ் சார்வினுந்தொண்டர்தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதேயெந்தை புகலூர்பாடுமின்புலவீர்காள்
இம்மையேதருஞ் சோறுங்கூறையு மேத்தலாமிடர் கெடலுமாம்
அம்மையேசிவ லோகமாள்வதற் கியாதுமையுற வில்லையே.

சுந்தரர் :—நன்று ! அவ்வாறே நான் ஆண்டவனைப் பாடிப் பொன்பெற்றேன்.

பரவை :—பிறகு என் செய்தீர் ?

சுந்தரர் :—அப் பொன்னை வழிச்செலவுக்கு வைத்துக் கொண்டு திருப்பைஞ்ஞீலி, திருஈங்கோய்மலை முதலிய தலங் களைத் தரிசித்து, கொங்கு நாடு சென்றேன். திருப்பாண்டிக் கொடுமுடி, திருப்பேரூர், திருவெஞ்சமாக் கூடல், திருக்கற் குடி, திரு இன்னம்பர் முதலிய தலங்களை வணங்கித் திருப் புறம்பயத்தைச் சேரும் அன்புமிக அதையும் தரிசித்துக் கொண்டு திருமுதுகுன்றம் செல்லலானேன். வழி தெரியா

மல் திகைக்க எம்பெருமான் வேதிய வடிவத்துடன் வந்து என்னைக் கூடலையாற்றூருக்கு வழிகாட்டி அழைத்து மறைந் தார். அவர் அருந் திறத்தை வியந்து கூடலையாற்றூரைத் தரி சித்துத் திருமுதுகுன்றத்தை அடைந்தேன். அங்கே உனக் காகப் பொன் வேண்டினேன். அவரும் அளவிலா நிதி அளித்து அங்கே மணிமுத்தா நதியில் போட்டு நம் ஊர் குளத்தில் எடுத்துக் கொள்ளச் சொன்னார்.

பரவை :—நன்றாய் இருக்கின்றது உம் சொல். விளை யாடுகின்றீர்களா ?

சுந்தரர் :—நான் சொன்னால் அப்படித்தான் இருக்கும். பிறகு நீயே கண்டுகொள்வாய்.

பரவை :—அப்படியானல் வாரும் சென்று காணலாம்.

சுந்தரர் :—நான் சென்ற தலங்களையெல்லாம் கூறிமுடிப் பதற்குள் இவ்வளவு அவசரம் ஏன் ?

பரவை :—நன்று ! நன்று ! மேலே சொல்லுங்கள்.

சுந்தரர் :—பிறகு சிதம்பரம் சென்று வணங்கி கருப் பறியலூர், பழமண்ணிப்படிக்கரை, வாழ்கொளிபுத்தூர், கானாட்டுமுள்ளூர், எதிர்கொள்பாடி, வேள்விக்குடி முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு இங்கு வந்து உன்னைச் கண்டேன்.

பரவை :—சரி! ஆயிற்றன்றே ! வாரும் குளத்துக்குச் செல்வோம் ; பொன் எடுப்போம்.

சுந்தரர் :—அவ்வாறே புறப்படு. (இருவரும் குளத்துக்குச் செல்லுகின்றனர். அநேகர் மூழ்கிக்கொண் டிருக்கின்றனர். சுந்தரர் வடகரையிற் றங்கித் தடவுகிறார். பொன் அகப்படவில்லை. சிறிது நேரம் சென்றது.)

பரவை :—ஆற்றில் இட்டுக் குளத்தில் தேடும் அற்புதம் இதுவோ! நான் அறிவேன். சற்று எடுத்துக் காட்டுங்கள்.

சுந்தரர் :—இறைவ! உன் விளையாட்டை நிறுத்தி எனைக் காத்தருள்.

பொன்செய்த மேனியினீர் புலித்தோலை யரைக்கசைத்தீர்
முன்செய்த மூவெயிலு மெரித்தீர்முது குன்றமர்ந்தீர்
மின்செய்த நுண்ணிடையாள் பரவையிவள் தன்முகப்பே
என்செய்த வாறடிகே ளடியேனிட் டளங்கெடவே.

(உடனே பொன் வந்தது; கரையிற் கொணர்ந்து மாற்று தேய்த்துப் பார்க்கக் குறைகிறது.)

சுந்தரர் :—வழிவழி ஆட்கொண்ட வள்ளலே. உம்முடைய சோதனை இன்னும் மேற்படல் வேண்டுமா? எனைக் கண்டு பலர் ஏசுவது உனை எள்ளுவதாகாதா! அன்றே எனை ஆட்கொண்டபோது என் ஆவியும் உடலும் உடைமையெல்லாமும் உடன்கொண்டிலையோ! இன்று எனக்கு இடையூறு உண்டாமோ. நன்மை செய்யினும் தீமை செய்யினும் நின்னையன்றோ சாரும். இதன் மாற்று நிறைத்தருள்.

(மாற்று நிறைகின்றது. யாவரும் அதிசயிக்கின்றனர்.)

பரவை :—இறைவன் தோழரே! என்னுடைத் தலைவரே! உம்மிடம் இறைவன் காட்டிய அருள்வியந்தோம். (காவலரை நோக்கி) இவைகளை நம் வீடு கொண்டு சேருங்கள். (சுந்தரரை நோக்கி) நாம் ஆண்டவனை வணங்கச் செல்வோம்.

(சுந்தரர் பரவை இருவரும் கோயிலுக்குச் செல்கின்றனர்.)

—

திருவொற்றியூர் கோயில்

சுந்தரர் :—

பாட்டும் பாடிப் பரவித் திரிவார்
ஈட்டும் வினைகள் தீர்ப்பார் கோயில்
காட்டும் கலமும் திமிலும் கரைக்கே
ஓட்டும் திரைவாய் ஒற்றி யூரே.

ஒற்றியூர் தியாகேசா! அன்றொரு நாள் குருகாவூருக்கு வழி காட்டிய கொற்றவா! ஏழையேன் பசியால் வருந்தத் திருக்கச்சூரில் அமுது அளித்த ஆண்டவனே! கன்னி யொரு பால் மகிழ்ந்துறையும் கறைக்கண்டா! பல்வேறு நற்றலங்கள் கண்டு தரிசித்தேன். அருள் கனிந்து உன் ஆசை உருக் காட்டி யருள். நான் வேண்டுவது உன் அருளே.

(இவ்வாறு போற்றி நிற்கத் திரை மறைவில் சங்கிலியார் மாலை தொடுத்துக் கொடுத்தார்; கண்ட சுந்தரர் அருகிருந்தவரை நோக்கி.)

அதோ தோன்றும் மின்னற்கொடி போல்வாள் யார்?

ஒருவர் :—ஐயா! அவர் என் நாட்டில் ஞாயிறு என்னும் ஊரில் வேளாளகுலத்து ஞாயிறுகிழார்க்கு மகளாகத் தோன்றியவர். இவர் பெயர் சங்கிலி என்பது. இவர், தாம் இறைவன் அருள் பெற்ற ஒருவருக்கே உரியவரென்றும் மற்றவரை மணந்து கொள்ளேமென்றும் உறுதி கூறி இத் தியாகேசப் பெருமானை வழிபட்டு வருகின்றார். இவரை மணம் பேசவந்த சிலரும் மரித்ததினால் இவருடைய பெற்றோர் இவரை இங்கே கொண்டுவந்து ஓர் கன்னிகா மாடத்தி லிருத்தி இறைவனார் திருப்பணியில் ஈடுபடுத்தி இருக்கின்றார்கள். இதுதான் நான் அறிந்தது.

(அனைவரும் செல்கின்றனர்.)

சுந்தரர் :—என்னே இது வியப்பு! இவளோ இறைவனருள் பெற்ற ஒருவருக்கு உரியள் என்று தன்னைக் கூறிக் கொள்ளுகிறாள். எனக்கோ இப்பிறவி இருவரால் வந்தது. கயிலையில் கண்ட அநிந்திதை கமிலினி இருவரும் என் பிறவிக்குக் காரணமாயினர். அவர்களில் பரவை ஒருத்தி போலும். மற்றொருத்தி சங்கிலி போலும். இறைவனார் ஆளாய் விதிவழி வாழும் என்னை வருத்தித் தன் ஆரருளால் அவ்விதிவழி அணையாவகைத் தடுத்து ஆட்கொண்ட பொன்னார் இதழி முடியார்பால் போய் என்னுருயிரும் எழில் மலரும் கூடப் பிணைக்கும் இவளைப் பெறுவேன்.

(இறைவன் சந்நிதி சென்று)

மங்கை ஒருபால் மகிழ்ந்ததுவும் அன்றி மணிநீள் முடியின்கண்
கங்கை தன்னைக் கரந்தருளும் காதலுடையீர்! அடியேனுக்கு
இங்கு நுமக்குத் திருமாலை தொடுத்தென் உள்ளத் தொடையவிழ்த்த
திங்கள் வதனச் சங்கிலியைத் தந்தென் வருத்தம் தீர்த்தருள்வீர்.

ஆண்டவ! அரவம் பூண்ட தாண்டவ! என் எண்ணம் எல்லாவற்றையும் நீர் அறிவீர். நானோ உமக்கு அடிமை. அச்சங்கிலியோ என் மனத்திண்மைகளை யெல்லாம் உடைத்தெறிந்தாள். நான் செய்வதொன்றும் அறியேனாய்த் தவிக்கின்றேன். தண்ணிலா மின்னொளிர் பவளச் சடையீர்! நீர் தான் எனக்கு அருள்புரிதல் வேண்டும்.

இறைவன் :—(அசரீரியாக) வன்றொண்ட! கொண்ட கவலை ஒழிக. இன்றிரவே அவள் கனவில் சென்று உனக்கிசையும்படி சொல்லி வருகின்றேன். ஆயினும் அவள் உன்னை இங்கேயே இருக்கச் சபதம் செய்யச் சொல்லுவாள். அதற்கென் செய்வாய்?

சுந்தரர் :—எல்லாமறிந்த ஏந்தால் ! இவ்வாறு சபதம் செய்ய நேருமாயின் இச்சந்நிதியில் நான் சபதம் செய்யும் போது நீர் மகிழ மரத்தின் கீழ் சென்றிருக்க வேண்டும்.

இறைவன் :—அவ்வாறே ஆகுக. இம்பருலகில் யாவருக்கும் எய்தவொண்ணு இருந்தவத்துக் கொம்பை உனக்குத் தருகின்றோம். நீ கொண்ட கவலை ஒழி.

அங்கம் 4] [காட்சி 2

(விடியற்பொழுது ; ஒற்றியூர் திருக்கோயிலில் சுந்தரர் ஒரு புறம் நிற்கிறார். சங்கிலியார் தோழியுடன் மற்றொரு புறம் வருகிறார்.)

தோழி :—அதோ இருப்பவர்தான் சுந்தரர் ; நம்மைத் தான் எதிர்பார்க்கிறார் போலும்.

சங்கிலி :—தோழி ! இரவு இறைவன் கனவில் கூறியபடி அவரைச் சந்நிதியில் சபதம் செய்ய வேண்டாமெனக் கூறி மகிழ மரத்தடியில் சபதம் செய்யச் சொல்.

தோழி :—அப்படியே அம்மா. (சுந்தரர் அருகில் வருகிறார்)

சுந்தரர் :—தோழி ! இச்சங்கிலி எனக்குரியவளென்று நேற்று இறைவன் எனக்கருளினர். இவளுக்கும் அவ்வாறே அருளினதாகக் கூறினர். ஆகவே இச்சங்கிலியை எனக்குத் தாரும். (அனைவரும் ஒதுங்க சங்கிலி ஒரு புறம் செல்கிறாள்.)

காரென்ன கருங்குழலாய் ! உன்னை விட்டுப் பிரிவேனென்று வருத்தமுறேல். இங்கு நான் உன்னைப் பிரியாமைக்கு ஒரு சபதம் செய்கிறேன். அனைவரும் வாருங்கள். திங்கள் முடியார் திருமுன்பு செல்வோம்.

தோழி :—எம்பெருமானே ! இந்தச் சிறிய விடயத்திற்காக ஒன்றான உமையோர் பாகன் எதிரிலேயா சென்று சப

தம் செய்ய வேண்டும். வேண்டாம். வேறு எங்காயினும் செய்து கொள்ளலாம்.

சுந்தரர் :—அப்படியாயின் வேறு எங்கே செய்வது ?

தோழி :—வேறு எங்கும் வேண்டாம். (மகிழ மரத்தைக் காட்டி) அதோ அந்தப் பச்சை மரத்தடியில் செய்தால் போதும்.

சுந்தரர் :— (சிறிது தயங்கி) சரி வாருங்கள் அங்கே செல்வோம். (அனைவரும் மகிழடியின் கீழ் செல்கின்றனர் ; சுந்தரர் மூவாத திருமகிழை முக்காலும் வலம் வந்து.)

இனி நான் இத்திருவொற்றியூரை விட்டு அகலேன்.

தோழி :—சரி இனி சங்கிலி உமது பொருள் ஆவள்.

(அனைவரும் செல்கின்றனர். சுந்தரர் சங்கிலியுடன் கோயிலுக்குள் போகின்றார்.)

அங்கம் 4] [காட்சி 3

திருவெண்பாக்கம் திருக்கோயில்

சுந்தரர் :—என் விருப்பமே என்னைக் கெடுத்தது. இத்தனை நாட்கள் திருவாரூர்த் தியாகேசனைப் பிரிந்திருந்தேனே. மறுபடியும் போக எண்ணிப் புறப்பட்டதும் என் கண்ணும் கெட்டு விட்டதே. மகிழடியின் கீழ் செய்த சபதமே இதற்குக் காரணமாயிற்று என்று உணர்ந்தேன். புற்றிடங்கொண்ட புராதனனை மறக்கக்கூடவில்லையே. வசந்தகாலமும் தோன்றிற்று. இவ்வசந்தவிழாவைக் கண் கொண்டு காணப்புறப்பட்டதும் கண் கெட்டனவே. மெய்யுறவு கண்ணார்பால் சூளறவு மறுத்ததினால் இவ்வினை வந்து எய்தியது கொல்லோ. இத்துயர் நீங்க என் செய்வேன். மூன்று கண்ணுடைய முதல்வா! என் கண்ணையுங் கூடவாகொள்ள வேண்டும். ஆ! இது வெண்பாக்கம் திருக்கோயில் போலும். வெண்பாக்கம் மேவிய

விகிர்தா ! இப்பொய்யடியேன் பிழைத்திடினும் வெறுத்திட வேண்டாவோ. அருள் செய்ய வல்லாய்! கண் தராவிட்டா லும் வழிகாண ஓர் ஊன்று கோலாயினும் கொடுத்தருள். நீ கோயிலில் உள்ளாயோ ? உன் காதிரண்டும் கேட்கவில் லையோ ?

அசரீரி :—உளோம் போகீர். (ஊன்றுகோல் ஒன்று சுந்தரர் கையில் வந்தது.)

சுந்தரர் :—

மான்றிகழுஞ் சங்கிலியைத் தந்துவரு பயன்களெல்லாம்
தோன்றவருள் செய்தளித்தா யென்றுரைக்க வுலகமெலாம்
ஈன்றவனே வெண்கோயி லிங்கிருந்தா யோவென்ன
ஊன்றவதோர் கோலருளி யுளோம்போகீ ரென்றானே.

அங்கம் 4] [காட்சி 4

ஆரூர் திருக்கோயில்

சுந்தரர் :—இதோ உன் அடியான், உன்னால் ஆட்கொள் ளப்பட்டவன், உன்னருள் வழி நின்றவன், ஒற்றைக் கண் கெட்டு நிற்கின்றேன். கண் காணாது குன்று முட்டி குழியில் விழுந்தவனானேன். வழி காணாது அலமந்தேன். உனக்கு ஆட்பட்டு நாய்போல் நிற்கும் எனக்கு வாய் திறவாது இருக் கின்றாயே ? அன்று காஞ்சியில் என் வேண்டுகோளுக் கிரங்கி ஒற்றைக் கண்ணளித்த உத்தமா! பாரும் ஊரும் அறிய நீதான் என் கண்கொண்டு பழிப்பட்டாய். ஆயும் பேடை அடையுஞ் சோலை ஆரூர் அகத்தீரே ! திருவாரூர் இருக்கை யாகக் கொண்டீர். இதுவோ நும் திருவருள்.

விற்றுக் கொள்வீ ரொற்றி யல்லேன் விரும்பி யாட்பட்டேன்
குற்ற மொன்றுஞ் செய்ததில்லை கொத்தை யாக்கினீர்

எற்றுக் கடிகே ளென்கண் கொண்டீர் நீரே பழிபட்டீர்
மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால் வாழ்ந்து போதீரே.

(மற்றைக் கண் தெரிகிறது. எழுந்து பரவசப் படுகின்றார்.)

சுந்தரர் :—ஹா! என்ன அதிசயம். என் இரு கண்களும் தெரிகின்றனவே. தியாகேசா! இதைத் தவிர உன்னை மற்றொன்றும் கேட்கின்றேன். பரவையோ நான் அவளைப் பிரிந்ததினால் என்மேல் வருத்தப்பட்டு நான் அனுப்பியவைகளையெல்லாம் புறக்கணித்து விட்டாள். சங்கிலியை மணந்த வருத்தம் அவள் மனதை வாட்டுகின்றது போலும்! சடைமுடி அண்ணலாகிய உமது அருள்வழியாலன்றோ இவ்விருவரை நான் மணம் புரிந்தது. பரவையைக் கண்டு நாட்கள் பலவாயின. அவளைக் கண்டு களிக்கிலேனேல் என் மனம் சாந்த நிலையடையாது. ஆரூரம்மானே! எக்காலும் என்னை இன்னல் படாதுகாத்து வந்த நீர் இன்றும் என்னைக் காத்தருள வேண்டும்.

முன்னைவினையால் இவ்வினைக்கு மூலமானாள் பாலணைய
என்னையுடையாய் நினைந்தருளாய் இந்தயாமத்தெழுந்தருளி
அன்னமனையாள் புலவியினை அகற்றில் உய்யலாமன்றிப்
பின்னையில்லை செயலென்று பெருமானடிகள் தமைநினைந்தேன்.

(இறைவன் மனித உருவத்தோடு வருகிறான்.)

இறைவன் :—வன்றொண்ட! உன் மனதில் உற்ற கவலை யாது?

சுந்தரர் :— (விழுந்து வணங்கி) அன்று அங்கு ஒற்றியூரில் நீரே அருள் செய்ய வடிவேல் ஒண்கண் சங்கிலியை அடியேன் மணஞ்செய்தேன். அத்திறத்தையெல்லாம் பரவை அறிந்தாள்; அறிந்த அவளிடம் நான் குறுகின் இறப்பதாகக் கூறுகின்றாள். தாயினும் நல்ல தோழருமான தம்பிரா

ளுரே! ஆய அறிவும் இழந்தயர்கின்றேன். என்னயர்வு நோக்கி இவ்விரவே போய்ப் பரவை புலவி தீர்த்துத் தாரும்.

இறைவன் :—நம்பி! நீ துன்பம் ஒழி. நான் உனக்கோர் தூதனுகி இப்பொழுதே மணிப்பூண் பரவைபாற் போகின்றேன். நீயும் அவள் வீட்டு அருகில் வந்திரு.

அங்கம் 4] [காட்சி 5

பரவை மனை

பரவை :—ஹா! இவ்வாடவர் செயலை அன்றே கண்டிருந்தும் யோசியாது போனேன். வண்டே அனையர் மாந்தர் என்பதைப் பண்டே அறிந்திருந்தேனுயினும் தியாகேசன் அருள்பெற்ற ஒருவர் இவராகலின் இவர்க்கு மணமிசைந்தேன். அவர் என்னை ஏமாற்றி ஒற்றியூர் சென்று ஓர் பெண்ணை மணந்தார். பிறகு இங்குவந்து பூசல் தீர்க்கின்ருர். கருணையங் கடலே! இவையெல்லாம் உன் திருவிளையாடல் தானே? இவ்வாறெல்லாம் என்னைச் சோதித்துக் கஷ்டப்படுத்துதல் கூடுமோ? எனக்கோ உணவு செல்லவில்லை. உறக்கம் கொள்ளவில்லை. மனம் விரும்பவில்லை. எந்நேரத்திலும் மகிழ்ச்சி தானும் இல்லை. ஆரூர் அம்மானே! உன் சோதனை இதுவோ?

தோழி ஒருத்தி :—அம்மா! நம் கோயில் பிராமணர் தங்களைக் காண வந்துள்ளார்.

பரவை :—அப்படியா!

(எழுந்து அழைத்துவந்து உட்காரச் செய்கிருள்.)

பரவை :—அந்தணப் பெரியீர்! என்னை நாடி பெருகு புவனம் சலிப்பின்றி, பேயும் உறங்கும் பிறங்கு இருள்வாய் இவ்வளவு தூரம் வரக் காரணம் யாதோ?

பிராமணர் :—நான் சொல்வதைத் தட்டாமல் செய்தால் வந்ததைச் சொல்கிறேன்.

பரவை :—என்னால் செய்யக்கூடியதாயின் தடையில்லை. நீர் எடுத்து இயம்பும்.

பிராமணர் :—அவ்வாறாயின் நம்பியாரூரர் இங்கு உன்பால் இவ்விரவு வரவேண்டும். இது உன்னால் ஆகக்கூடிய காரியந்தானே. தடையொன்றும் சொல்லலாகாது.

பரவை :—நன்று சொன்னீர்.

பங்குனித் திருநாளுக்கு பண்டுபோல் வருவா ராகி
இங்கெனைப் பிரிந்து போகி ஒற்றியூர் எய்தி யாங்கே
சங்கிலித் தொடக்குண் டாருக் கிங்கொரு சார்வுண் டோநீர்
கங்குலின் வந்து சொன்ன காரியம் அழகி தென்றாள்.

(சிறிது கோபமாக) எல்லாம் நானறிவேன். எனைப்பிரிந்து மற்றொருத்தி தோள் அணைந்து மகிழ்ந்தவர்க்கோ நீர் பரிந்து பேசுகின்றீர்? இந்தக் காரியத்தை மேற்கொண்டு நீர் என் தலைவாயிலில் வந்ததும் உம் தகுதிக்குத் தக்கதொன்றாகுமோ? வந்த வழியே போம்.

அந்தணர் :—அவ்வளவுதானே? நான் சென்று வரட்டுமா?

பரவை :—அப்படியே செல்லுங்கள்.

அந்தணர்:—சென்று வருகிறேன் (சீக்கிரம் செல்கின்றார்.)

பரவை:—(சிறிது திகைத்து) ஹா! சென்றவர் மறையவராகக் காணவில்லையே. (தோழியை விளித்து) தோழி! தெருவில் சென்று பார்; அந்தப் பிராமணர் எங்கு செல்கின்றாரென்று.

தோழி :—(தெருவில் சென்று பார்த்து வந்து) அம்மா! அவரைக் காணவில்லையே.

பரவை :—ஹா! உண்மையாகவா? காணவில்லையா? சரி, நீ போ. நான் நினைத்தது உண்மையாயிற்று. ஆளுடை முதல்வரே! அங்கயற்கண்ணியோர் பங்கரே! உம்மை இன்னாரென்று அறியாது ஒதுக்கித் தள்ளினேனே! உம் தோழனுக்காக அர்ச்சக வேடங் கொண்டு வந்தும் உம்மை யறியாது வாளாவிருந்தேனே! ஆ! என்னே என் பேதைமை! பேதைமை என்பது மாதர்க்கணிகலம் என்ற சொல்லுக்கிலக் காயினேனே.

(இறைவனார் தன்முழு உருவத்தோடு வருகின்றார்.) பாவையார் விழுந்து வணங்கி வேண்டுகின்றார்.)

இறைவன் :—பரவையே! உன்னிடம் என் தோழன் அனுப்ப மறுபடியும் வந்தோம். முருகலர் குழலாய்! நீ முன் போல் இன்னும் மறுக்காதே. அவன் பிரிவுற வருந்துகிறான். அவன் இங்கே வரப்பெறல் வேண்டும்.

பரவை:—ஆண்டவ! அம்பலத்தாடல் செய்தாண்டவ! அரவப்பணி பூண்டவ! அடியவர் வேண்டவந்து மறைகாணு பெரும்பாதம் வருந்த இவ்வேழையின் பொருட்டு உழல்வீர் ஆகில் நான் மறுத்துக் கூறுவதும் உண்டோ? தங்களது ஆணைப்படியே—ஆசிப்படியே — அருள்வழிப்படியே வன்றொண்டரை ஏற்றுக்கொள்கிறேன்.

இறைவன்:—உடனே சென்று என் தோழனை அனுப்புகின்றேன்.

(செல்கின்றார். சிறிது நேரஞ்சென்று சுந்தரர் வர, பரவையார் வீதியில் வந்து கைக்கொண்டு உள்ளே அழைத்துச் செல்கிறார். ஆண்டவனைத் துதிக்கின்றனர்.)

திருப்புன்கூர்

(கலிக்காம நாயனர் தனிமையில் இறைவனை வழிபடுகிருர்.)

புன்கூர்மேய புண்ணிய! உன்பாத மன்றிப் புகலிட மொன்றில்லாதவனுகி வாழ்ந்து கொண்டிருக்கிறேன். உன் அழகிய திருஉருவமேனி கண்டு மகிழ்வதே நான் வேண்டும் பெரும் பேருகும். நின்புகழ் பேசுவதே நான் வாய் பெற்ற பலன். நின்அடியார் பாடும் மொழி கேட்பதே செவிக்கின் பம். இத்தகைய இன்ப நிலையை ஈந்தருளும் என் இறை வனே! உன் அருள் வழி நின்று ஆட்கொள்ளும். அடியவர் பெருஞ் சிறப்பு நான் அறிய நின்று காட்டி அவர்களையும் வழிபடு முறையில் என்னை ஆக்கிவைத்தருளும்.

(அடியவர் ஒருவர் வருகின்றனர்; எதிர்வணங்கி அழைத்து வந்து உட்காரவைத்து)

கலிக் :—இறைவனது திருமேனிப் பொலிவைப் பல் வேறு இடங்களில் கண்டு தரிசிக்கும் பேறு பெறுவீர். நீவிர் கண்ட இறைவன் கோலங்களையும் அற்புதங்களையும் எனக்கு விளக்க உரைத்தருள வேண்டும்.

அடியவர் :—இறைபணி பூண்ட புனித! நான் கண்ட தலங்கள் பல. அத்துணைத் தலங்களிலும் இறை அழகுப் பொலிவுதனைக் கண்டு சின்னுட்களுக்கு முன் திருவாரூர் அடைந்தேன். அங்கு நடந்த அற்புதந்தான் செப்பொணுத் திறம் வாய்ந்தது.

கலிக் :—ஆ! அப்படியா? என்ன அற்புதம் ஆண்டவன் காட்டி அருளினன்.

அடியவர் :—திருமணப் பந்தரிலே வலிய ஆட்கொண்ட நம்பி ஆரூரருக்காக இவ்வாரூரர் மண்மிசை நடந்து தூதாகச் சென்ருர்.

கலிக் :—என்ன ? யார் ? யார் பொருட்டு ? எங்கு சென்றார் ?

அடியவர் :—ஏன் இவ்வளவு மனச் சீற்றம். சுந்தரர் ஒற்றியில் மற்றொரு குழலியை மணந்ததற்காக திருவாரூரில் இருக்கும் பரவையார் ஊடற்கொள்ள அவ்வூடலை நீக்க வன்றொண்டர் இறைவனை வேண்டினார். அவர் அத்தொண்டர் வேண்டுகோளுக் கிணங்கி இருமுறை பரவை வீட்டிற்குத் தூதாகச் சென்று அவளைச் சேர்ப்பித்தார்.

கலிக்காமர் :—என்ன ? கேவலம் ஒரு பெண்ணின் காரணமாக எல்லாம் வல்ல இறைவனை உலகம் ஆக்கிய ஒரு பெருமுதலைத் தூதாக அனுப்பினானோ ? நன்று அவன் செயல். வேறென்ன விசேடம்.

அடியவர் :—வேறொன்று மில்லை.

கலிக்காமர் :—வாரும் உட்சென்று உணவுகொள்வோம். (இருவரும் செல்கின்றனர். கலிக்காமர் சூலைநோயால் வருந்துகின்றார்.)

ஆ ! என்னே இக்கொடிய சூலை நோய். வன்றொண்டர் தூதனுப்பிய செய்தி கேட்ட செயலே கொடிதென்றிருக்க இச்சூலைநோய் அதனினும் கொடிதாகவன்றோ காணப்படுகின்றது.

(வயிற்றைப்பிசைந்து) ஆ ! இக்கொடிய சூலைநோய் என் உயிரையும் சேர்த்து வாட்டுகின்றது. அன்று அப்பருக்குண்டாகிய சூலைநோய் செய்தகொடுமையைக் கேட்டிருக்கின்றோம். இன்று நேராகவே அக்கொடுமையை நான் கஷ்டப்பட்டு அனுபவிக்க வேண்டி வந்ததே.

இறைவா ! அன்று வாகீசரைக் காத்து நின்ற வள்ளால்! இக் கொடிய சூலை நோய் என்னைப் பெருந்துயர் வழிச் சென்று சாரக் காட்டியுள்ளதே. நான் என் செய்வேன். எவ்வாறாயினும் நான் இந்நோயினின்றும் நீங்கத்தக்க வழி

அருள்வாய். அடியார் பிணி நீக்கும் அருள் மருந்தே! புன்கூர் மேவியே புனித! உன்னையன்றி ஒருவரையும் உளத்தமைத்து நின்றறியேனே. அஞ்சலென்றனை ஆட்கொள்ளல் உன் அருளின் திறமன்றோ. எவ்வாற்றாயினும் உன்பாதம் பற்றினேன்; பரவினேன்; பணிந்தேன். என்நோய் நீக்குவாய். (இறைவன் தோன்றுகிறான்.)

இறைவன் :—அன்ப! உன் நோயறிந்தோம்; உன் நோய்தீர்க்க வல்லவன் அவ்வன்றொண்டன் ஒருவனேயாகும். எனவே அவன் வந்து உன் நோயை நீக்குவான்.

கலிக் :—ஆண்டவ!

எம்பிரா னெந்தை தந்தை தந்தை யெங்கூட்ட மெல்லாந்
தம்பிரான் நீரே யென்று வழிவழிச் சார்ந்து வாழும்
இம்பரின் மிக்க வாழ்க்கை யென்னைநின் றீருஞ் சூலை
வம்பென வாண்டு கொண்டா னொருவனே தீர்ப்பான் வந்து!

நீர் அவ்வாறு செய்தால் நான் கூறுவதொன்றும்இல்லை. உம்பெருமைதான் என்னே! (அவர் வருந்துகின்றார்.)

இறைவன்:—(தனி) சரி இனி நாம் வன்றொண்டரை இங்கனுப்புவோம். (மறைகின்றார். சிறிதுநேரஞ்சென்று)

ஓர்ஆள் :—ஐயா வன்றொண்டர் இதோ நம் ஊர் அருகே தங்களை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்.

கலிக் :—சரி நீ செல். (செல்கிறான்) ஆ! அக்கொடியோன் எம்பிரானைத் தூதனாய் ஏவினானா! இங்கு வருகின்றானா! மற்று அவன் வந்து தீர்ப்பதன் முன் நான் இம்மாயப்பற்றில் நின்றென்னை நீங்கா பாதகச் சூலை பொருந்திய இவ்வயிற்றைக் கிழித்துக் கொண்டு இறக்கின்றேன்.

(வயிற்றைக் கிழித்து இறக்கிறார்; மனைவியார் உள் நுழைந்து காண்கிறார்.)

மனைவி:—என்னே இக்கொடுமை ! ஈசா! ஈதோ நான் காணவேண்டிய காட்சி.

(அழுது கத்தி எடுத்துக் குத்திக் கொள்ளப் போகிருர் ; ஓர் ஆள் வந்து சுந்தரர் நம் வாயிலில் வந்திருப்பதைத் தெரிவிக்கிருன்.)

மனைவி :—சரி இதோ உடனே வருகிறேன். நீ அவரை வரவேற்க ஏற்பாடுசெய். (வீதியிற்சென்று விதிமுறை வணங்கி உள்ளழைத்து அமரவைக்கிருர்.)

சுந்தரர் :—அம்மா ! நான் சூலைநோயால் வருந்தும் கலிக் காமரைக் காணவேண்டும். அவர் எங்கு இருக்கிருர்? நான் சென்று பார்க்கலாமா ?

மனைவி :—அம்பலவாணன் அடித்தொண்டரே ! அவர் உடம்பிற்கு ஒன்றுமில்லை. நன்ருக உள்ளே உறங்கிக்கொண் டிருக்கிருர்.

சுந்தரர் :—நீங்கள் கூறியது உண்மையாயினும், அவர் உடம்பிற்கு ஒன்றுமில்லையாயினும் என் மனம் ஏனே துன்புறுகிறது. ஆதலால் அவரை நான் காணவேண்டும்.

(இருவரும் உட்சென்று அவர் இறந்திருத்தலைக் காண்கிருர் கள்).

சுந்தரர்;—ஹா ! இக்கொடுமையைக் காணவா இறைவா என்னை இங்கு வரவழைத்தனை ? (பதைத்து) நானும் அவர் சென்ற வழியே சென்று அவரைக் காண்பேன்.

(கத்தியை நோக்க, இறந்த கலிக்காமர் உயிர் பெற்று எழுந்து இவர் கையை பிடித்துக்கொள்கிருர். இருவரும் ஒருவரையொருவர் விழுந்து வணங்குகின்றனர். பூமாரி பொழிகின்றது.)

கலிக்காமர் :—இறைவன் அன்புடை எழிற்ருேண்ட ! நின்வரவால் நாமும் நன்னிலை யடைந்தோம். உண்மை அன் பைக் காட்டவந்த உறுசூலை நோயே உனக்கு வணக்கம். நாம் சென்று திருப்புன்கூர் செல்வனை வழிபடுவோம் வருவீர்.

சுந்தரர்:—ஆம் சென்று அருளுடை அண்ணலை வழிபட வேண்டும்.

(இருவரும் கோயிலுக்குட் செல்கின்றனர். அடியவர் பலர் உட்புகுகின்றனர்).

சுந்தரர் :—

அந்த ணாளனுன் னடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்ற னாருயி ரதனை
வவ்வினாய்க் குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமன்தமர் நலியி
லிவன்மற் றென்னடி யானென விலக்குஞ்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும்பொழிற் றிருப்புன் கூருளானே.

அங்கம் 5] [காட்சி 2

திருஅஞ்சைக்களம்

(சேரமான் பெருமாள் திருவஞ்சைக்களத்தே இறைவனுக்குப் பணி செய்துகொண்டிருக்கிறார்.)

கறைமிடற்றண்ணல்! கற்பகக் கோனும் கரிநிறமாலும் பொற்கமலத்தமர் புண்ணிய கோவும், கண்டறிய முடியாத பொங்கொளி முதலே! பொய்யாப் பெருவாழ்வே! பொற்புடைஅமிர்தம் அமரர்க்களித்துப்பொல்லாவிடமுண்ட புனித! சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த தூமனத் தொண்டருள்ளீர்! நான் உம்மைப் பணிய என்னை ஆட்கொண்ட அம்பலச்செம்மால்! மன்றில் நடம்புரி மதியுடைக் கொழுந்தே! உம்பதம் பணிந்தேன். (நாள்தோறும் கேட்ட இறைவன் சிலம்பொலி அன்று கேளாதிருக்க) ஹா! நான் என்ன பிழை செய்தேன். நாடோறும் என் பூசை முடிவிற் கேட்டு

ஆனந்திக்குஞ் சிலம்பொலி இன்று கேட்கவில்லையே! ஏனே? இன்று நான் செய்த பிழைதான் யாதோ? அருள் பெருகு தனிக்கடலாய்! அம்பலத்துள் அருநடம் புரியும் ஆண்டவன் சிலம்பொலி இன்று நான் கேட்கக்கூடவில்லையே. இனி உடம் பிருந்து என் பயன்? செவியால் பெறும் பயன் யாது? இதோ இந்த உடம்பை யானே கொன்று போடுகிறேன். (கத்தியை யுருவ ஒலி கேட்கிறது) ஈதென்ன ஆச்சரியம்! இப்பொழுது கேட்கப்பெற்றேனே. இறைவா! இத்துணைக் காலம் தாழ்த்து இன்னே நின் ஒலி கேட்கக் காரணம் யாதோ? அருளிச் செய்யவேண்டும்.

அசரீரி :—அன்ப! பொன்னம்பலத்தில் வன்றொண்டர் நம் கூத்தாடுதலைக் கண்டு ஒன்றிய உணர்வால் நம்மைப் போற்றிப் பதிகம் பாடியதால் அதைக் கேட்டு வரக் காலம் தாழ்த்தோம்.

சேரர் :—ஹா! இன்று சிலம்பொலியோடு திருச்சொல் ஒலியும் கேட்கப் பெற்றேன். சிலம்பொலி கேட்க வில்லையே என்று வருந்தியதற்குப் பதிலாக பெரும் மகிழ்ச்சி உற்றேன். வன்றொண்டரது இசையே வாணரை மயக்கிய தென் ருல் அத்தொண்டரை நாம் காணவேண்டுவதவசியமன்றே? உடனே தில்லைக்குப் புறப்பட வேண்டும். நம் மந்திரியை வேண்டிய ஏற்பாடுகள் யாவையும் செய்யச் சொல்வோம்.

(காவற்காரனை ஏவுகிருர். சிறிது நேரம் சென்று மந்திரி உட் புகுகிருர். இவரும் பூசை அறையிலிருந்து வெளி வருகிருர்.)

மந்திரி :—சேரர் பெருமானே! ஈண்டு எனை அழைத்த காரணம் யாதோ?

சேரர் :—மதிவன்மை மிக்க மந்திரி! நான் சுந்தரர் என் னும் சிறந்த அடியவரைப் பற்றி ஆண்டவனுலேயே கேள் விப்பட்டேன். அவர் இசை கேட்டு அவ்விறைவனே எல்

லாத் தன்மையையும் விட்டிருந்தாரென்றால் அவ்வடியவர் பெருமை என்னென்பது! ஆகவே அவரை நம் நாட்டிற்கு அழைத்து வந்து நம்முடன் சிலகாலம் இருக்கச் செய்ய வேண்டும். அதற்கு இன்றே புறப்பட வேண்டும். அப் புறப்பாட்டுக்கு வேண்டிய தக்க ஏற்பாடு செய்யவே உம்மை இங்கு அழைத்தேன்.

மந்திரி :—சேரர்குலக் கொழுந்தே! இத்தொண்டில் என்னையும் ஈடுபடச் செய்த தங்களுக்கு என்செய வல்லேன். ஏற்பாடெல்லாம் விரைவில் முடிவுபெறும். தாங்கள் புறப் படலாம்.

அங்கம் 5] [காட்சி 5

திருவஞ்சைக்களத்துத் திருக்கோயில்

(அனைவரும் இறைவனை வழிபடுகின்றனர்.)

சுந்தரர் :—

முடிப்பது கங்கையுந் திங்களுஞ் செற்றது மூவெயில்
நொடிப்பது மாத்திரை நீறெ ழக்கணை நூறினர்
கடிப்பது மேறுமென் றஞ்சு வன்றிருக் கைகளால்
பிடிப்பது பாம்பன்றி யில்லை யோவெம் பிரானுக்கே.

அஞ்சைக்களத்தப்ப!உன் அருட்பெரு வுருக்கண்டேன். ஆனந்தம் கொண்டேன். மலைநாட்டின் பெருந் தவத்தின் மகிழ்வோனே! சேரர்கள் தம் திருநாட்டைச் சீர்பெறச் செய் வோய்! கொங்கு நாட்டுக் குழக! உன் அருளால் அன்றோ இச் சேர நாட்டில் சில தீந்தமிழ் நூல்கள் தோன்றின. எத் தகைய தேவர்க்கும் வணங்காத செங்குட்டுவனது சென்னி உனை வணங்கிச் சென்றது என்றால் உன் பெருமை உரைக் கற் பாற்றோ!

சேரர் :—வன்றொண்டரே! இனி நாம் நம் இல்லம் செல்வோம்.

(சுந்தரர் யானைமீது அமர, சேரர் சாமரை இரட்ட வீதிவழியே அரண்மனை சென்று சிங்காதனத்தில் அமர்ந்து நிற்க தேவிமார் வாசனை ஏந்தி பூசனை புரிகின்றனர்.)

சேரர் :—சுந்தர ! உன் வரவால் என்னுடும், என் வீடும் என் ஊரும் நானும் அடைந்த மகிழ்ச்சி அளவிடற்கரிதாய் பரந்து கிடக்கின்றது. என் இல்லம் செய்த தவப் பயனுல் இங்கெழுந்தருளி எம்மை யெல்லாம் மகிழ்வித்த உம்முடைய பெருமையைஉரைக்கற்பாற்ரோ. வாரும் உணவுகொள்வோம்.

(உள் சென்று உணவருந்தி வருகின்றனர். சுந்தரர் முன் வந்து தனிமையில் நிற்கிறார்.)

சுந்தரர் :—ஹா! நான் திருவாரூரைவிட்டு நாட்கள் பலவாயினவே. எத்தனை நாள் பிரிந்திருப்பேன். இறைவனையே உடனே சென்று அவசியம் காண வேண்டும். இவர்களது அன்போ அளவிடற்பாலதாய் பெருகிக் கிடக்கிறது.

(சேரர்பின் வருதல்)

சேரர் :—உயிர்த் தோழரே ! என் ஆழ்ந்த சிந்தனையில் இருக்கின்றீர் ?

சுந்தரர் :—ஒன்றுமில்லை ; நான் என் ஊரைவிட்டுப் புறப்பட்டு வந்து தியாகேசரைக் காண்பதை விடுத்து எத்தனை நாளாயிற்று ? உடனே புறப்படவேண்டும். ஆரூர் அப்பனைத் தரிசனம் செய்ய வேண்டும். என் வேண்டுகோளுக்கு மறுக்காது இணங்கி என்னை உடனேவழியனுப்பக் கேட்டுக் கொள்கிறேன்.

சேரர் :—ஹா! தாங்கள் செல்ல எவ்வாறு என்மனம் ஒப்பும் ?

சுந்தரர்:—நீர் ஒன்றும் வருந்தாதீர். இவையெல்லாம் ஆண்டவன் ஆணை. நீர் உமது பதியின் கண்ணிருந்து அரசு புரியும். நான் சென்று சீக்கிரம் வருகிறேன்.

சேரர் :—அன்பரே ! உமது திருவடிகளே எனக்கு அரசாட்சி. ஆகையால் தேவரீரை விட்டுப்பிரியேன். பிரியினும் ஆற்றேன். ஆயினும் திருவாரூர்க்குச் செல்ல எழுந்த மனக் காதலை நீக்கவும் அஞ்சுகின்றேன்.

சுந்தரர் :—தோழரே ! ஆரூர் செல்லாது இனி அரைக் கணமும் தாமதியேன். நீர் மாதோர்பாகன் அருளால் இங்கிருந்தே அரசு புரியும்.

சேரர் :—அவ்வாறுயின் தங்கள் மனம் போல் நடக்கக் காத்துக் கொண்டிருக்கிறேன். நான் கொடுக்கும் பொருள்களை மாத்திரம் தயவு செய்து உடன் எடுத்துச் செல்வீர்களாக.

சுந்தரர்:—நன்று ; அவ்வாறே செய்கின்றேன்.

(சுந்தரர் புறப்பட, ஆட்கள் நிரம்பப் பொருள் எடுத்துப் பின் செல்கின்றனர்)

அங்கம் 6] [காட்சி 1

அவிநாசி

(மறையவர் வீதியில் சுந்தரர் வர, ஓர் வீட்டில் அழுகையும் மறு வீட்டில் மங்கல ஒலியும் கேட்கின்றது.)

சுந்தரர் :—ஈதென்ன வியப்பு! ஒரே வீதியில் ஓர் வீட்டில் மங்கல ஒலியும் அடுத்த வீட்டிலே அழுகை ஒலியும் கலந்தாற் போல் கேட்கின்றதே. இதன் காரணத்தைச் சென்று விசாரிப்போம்.

(அருகில் சென்று ஒருவரைக் கேட்கிறுர்.)

ஐயா ! ஈதென்ன ! இரு வீட்டிலும் இரு வேறு ஒலி கள் கேட்கின்றனவே.

ஒருவர் :—ஐயா, மங்கல ஒலி கேட்கும் வீட்டில், அவ் வீட்டுப் பிள்ளைக்கு உபநயனம் நடக்கின்றது. அப்பிள்ளை யும் அடுத்த வீட்டுப் பிள்ளையும் சிறுவராயிருக்கும்போது ஓர் நாள் மடுவில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப் பொழுது அயல் வீட்டுப் பிள்ளையை முதலை ஒன்று விழுங்கி விட்டது. அதுவும் இருந்தால் இப்பொழுது உபநயனம் ஆகுமேயென்று அவர்கள் வருந்திக்கொண்டிருக்கின்றனர்.

சுந்தரர் :—(மகனை இழந்த தாய் தந்தையர் ஓடி வந்து இவர் பாதங்களில் விழ) பெரியீர் நீங்கள் அஞ்சவேண்டாம் ; இன்ப மைந்தனை இழந்தவர் நீர் தாமோ ?

பெற்றோர்:—அதுமுன்பு நிகழ்ந்தது. தேவரீரை வணங்க விரும்பி இருந்தோம். அந்த விருப்பம் பழுதாகாமல் தாங்கள் எழுந்தருளப் பெறும்பேறு பெற்றோம். இனி எமக்குவேண்டு வது யாது ?

சுந்தரர் :—நீவிர் முன் வருந்தியதைக் கண்டேன். சிறு வனை நான் அந்த முதலை வாயிலிருந்து அழைத்துத் தரு கின்றேன். அம்மடு எங்குள்ளது ?

ஒருவர் :—அதோ தோன்றும் சோலைக்குள் அம்மடு இருக்கின்றது.

சுந்தரர் :—வாரும் எல்லோரும் அங்கு செல்வோம். (அனைவரும் செல்கின்றனர், மடுவின் கரை அடைந்து) இம் மடுவிலோ, மகன் முதலையால் கொள்ளப்பட்டான் ?

உரைப்பா ருரையுகந் துள்கவல் லார்தங்க ளுச்சியாய்
அரைக்கா டரவா ஆதியு மந்தமு மாயினாய்

புரைக்காடு சோலைப் புக்கொளி யூரவி நாசியே
கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே.

(முதலை உண்ட பிள்ளையை வயது வந்ததாகக் கொண்டுவந்து கரைக்கு வைத்தது.)

சுந்தரர் :—இதோ, உம்மைந்தன் ; கொண்டு உபநயனம் செய்து மகிழ்வீர்.

அங்கம் 6] [காட்சி 2

(சுந்தரர் திருவஞ்சைக்களத்தே இறைவனை வணங்குகின்றனர்.)

திருஅஞ்சைக்களம்

வெறுத்தேன் மனைவாழ்க் கையைவிட் டொழிந்தேன்
விளங்குங் குழைக் காதுடை வேதியனே
இறுத்தா யிலங்கைக் கிறையா யவனைத்
தலைபத்தொடு தோள்பல இற்றுவிழக்
கறுத்தாய் கடனஞ் சமுதுண்டு கண்டங்
கடுகப் பிரமன் தலையைந் திலுமொன்
றறுத்தாய் கடலங் கரைமேன் மகோதை
யணியார் பொழிலஞ் சைக்களத் தப்பனே.

(மால் முதலியோர் வெள்ளையானையுடன் அருகே வருகின்றனர்)

சுந்தரர் :—ஆ! அதோ யாரோ வருகின்றனர். சிவ கணப் பொலிவு காண்கின்றது. மால் முதலியோரும் காண் கின்றனர். என்ன? இன்று நான்கயிலை காண்கின்றேன். ஒன்றும் அறிய கில்லேன்.

(யாவரும் நெருங்கி.)

மால் :—இறைவன் அடித்தொண்டரே! உம்மை இவ் வெள்ளையானையின்மேல் ஏற்றி அழைத்து வரும்படி ஆண்ட வர் எங்களை அனுப்பினர். ஆதலால் தயவு செய்து எங்க ளுடன் வாரும்.

சுந்தரர் :—அப்படியே (தனக்குள்) ஆயினும் நம் நண்பர் சேரமானைத் தனியே விட்டுச் செல்கின்றோமே. அவரையும் உடனழைத்தல்லவோ செல்ல வேண்டும். அவரை மனதில் நினைக்கின்றேன்.

(யானைமேல் ஏற ஆகாயத்தில் பறக்கின்றது. சிறிது நேரத்தில் சேரமான் அங்கே வருகின்றார்.)

சேரமான் :—இங்கன்றோ நம்மை வன்றொண்டர் நினைத்த இடம்; அவரைக் காணோமே (நிமிர்ந்து பார்க்கின்றார்.) அதோ கைலைக்கு வெள்ளை யானையின் மேல் செல்கின்றார். நாமும் நம் வெண்புரவி மேற்செல்வோம்.

(குதிரையின் காதில் பஞ்சாட்சரம் ஓதுகின்றார். குதிரை பறந்து வேகமாக யானையை வலம் செய்து முன் செல்கின்றது.

சுந்தரர் :—

இந்திரன் மால்பிரமன் னெழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளவென்னை மத்தயானை யருள்புரிந்து
மந்திர மாமுனிவ ரிவனாரென எம்பெருமான்
நந்தம ரூரனென்றான் னொடித்தான்மலை யுத்தமனே.

அங்கம் 6] [காட்சி 3

கைலை இறைவர் சன்னதி

(சுந்தரர் உள்வருகின்றார். வீழ்ந்து வணங்குகின்றனர்.)

இறை :—ஊரனே வந்தனையா? வா.

சுந்தரர்:—என்னை ஆட்கொண்ட ஈசா! உமது திருவருளால் வரப்பெற்றேன். எனினும் என் நண்பர் சேரமான் வாயிற் புரத்திலே தடைப்பட்டு வரமுடியா திருக்கின்றார். அவரையும் வரவழைத்தருளீர்.

இறை :—பெரிய தேவா! நீ சென்று சேரமானை அழைத்து வா.

பெரியதேவர் :—அப்படியே,

(சென்று அழைத்து வருகின்றார். வந்து வீழ்ந்து வணங்குகின்றார்.)

இறை :—(புன்சிரிப்புக் காட்டிச்) சேரமானே இங்கு நாமழையா முன்னமே நீயேன் வந்தாய்?

சேரமான் :—(அஞ்சல் செய்து) அடிநாயேன் ஆரூரர் கழல் போற்றி புரசையானைமுன் செலுத்தவந்தனன். பொழியும்நின் கருணைத் தெண்டிரை வெள்ளம் எனை இங்கு கொண்டுவந்து சேர்த்தலின் தேவரீர் திருமுன்வரப் பெற்றேன். நான் தங்களைப் பாடிய பாடலொன்றுண்டு. பெருகு வேதமும் முனிவரும் துதிப்பரும் பெருமையாய்! உனை அன்பால் திருஉலாப் பாடினேன். இதைத் தேவரீர் திருச்செவி சாய்த்தருள வேண்டும்.

(ஆதி உலாவினைப்படித்து அவையில் அரங்கேற்றினர். அனைவரும் நன்றென மொழிகின்றனர்)

இறைவனர் :—நன்று நுந்திருமொழி; நீவிர் இருவரும் இக்கைலை ஓலக்கத்திலேயே சிவகணத் தலைவர்களாய் இருந்து சீர் பெறவாழ்வீர்கள்.

இருவரும் :—அப்படியே செல்கின்றோம்.

(இருவரும் செல்கின்றனர். மறுபுறம் அனிந்திதை கமலினி வருகின்றனர். பணிகின்றனர்.)

பார்வதி :—அருமைச் சேடியர்களே! வாருங்கள்; நீங்கள் முன்போல் எனக்குப் பணியாற்றுவீர்கள்.

இருவரும் :—அப்படியே அம்மா.

முற்றிற்று

அ றி க் கை

இந்நாடகத்தை நடிக்க விரும்புவோர் இந்நூலாசிரியருடைய உத்தரவு பெறவேண்டும். உத்தரவின்றி நடிப்பவர்கள் சட்டப்படி நடவடிக்கைக்குள்ளாவார்கள்.